# ரமணோதயம்

அக்டோபர் 2012
காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்
விலை ₹ 20



# ஓர் அன்பு வேண்டுகோள்

ரமணோதயம் வாசக அன்பர்களே!

ரமணோதயம்கடந்த பதினோரு ஆண்டுகளாக பொருளாதார தளர்வுகளுக்கிடையிலும் தனது சேவையில் எவ்வித சோர்வுமின்றி ரமண அன்பர்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவது சொல்லித் தெரிவதில்லை. தனது பன்னிரெண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நல்வேளையில் இதன் நிர்வாகம் ரமண அன்பர்கள் முன் வைக்க வேண்டிய அன்பு வேண்டுகோள் ஒன்றுள்ளது. இதுகாறும் இதனைப் பேணி வளர்த்த பெருமையனைத்தும் ரமணோதய வாசகர்களையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனியும் ரமணோதயம் தொடர்ந்து பொருளாதாரத் தளர்வின்றி தனது பணியைத் தொடர வேண்டுமெனில் அதற்கான வைப்பு நிதி மிகவும் வலுவான நிலையில் வைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. தொடர்ந்து எவ்விதப் பொருளாதாரத் தடங்கலுமில்லாமல் இதன் பணி தொடர குறைந்தபட்சம் ரூபாய் பத்து இலட்சம் வைப்பு நிதி உருவாக்கப் பட வேண்டும். இதற்கு பகவானைப் பிரார்த்திப்பதுடன் உங்களைத்தான் இப்பொருளுதவியை அளிக்க வேண்டும் என வேண்டுகிறோம். இந்த வைப்புத் தொகையின் கணக்கில் பொருளுதவி செய்ய தாங்கள் ஆயிரம் மற்றும் அதன் மடங்குகளாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ "Ramanodhayam" என்னும் கணக்கிற்கு செலுத்த வேண்டுகிறோம். இத்தொகை அளிப்போருக்கு S80G பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

என்றும் பகவான் பணியில்,
ரமண கேந்திரா டிரஸ்ட்
சென்னை

முன் அட்டைப்படம்: ரமண கிரந்தாலயத்தில் தக்ஷிணாமூர்த்தி உருவச்சிலை அருகே அமைந்துள்ள திருவிளக்கு

உதயம் 12 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்

அக்டோபர் 2012

**ஆசிரியர்:** Dr. S. ராம் மோஹன்

**இணை ஆசிரியர்:** தியாகராஜன்

**ஆலோசகர்கள்:**

ஏ.வி. சுப்ரமணியன், ஜா. ஜயராமன், சந்திரமௌலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

**ஆண்டுச் சந்தா:** ₹ 75 **தனி பிரதி:** ₹ 20

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:

குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2012


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை<br>Dr. ஏ.வி. ராஜகோபாலன் | 19 |
| 3 | இனிவரும் திருநாட்கள் — 2012 | 27 |
| 4 | ரிபுகீதை — தியாகராஜன் | 28 |
| 5 | உதித்த இடத்தில் ஒடுங்கு [ஸ்ரீ ரமண சூத்ரம்]<br>பிர. கிரிதர ஜெகீதஷ் | 35 |
| 6 | மோனசன்னிதியின் மகிமை<br>வி. நிரஞ்சன் | 41 |
| 7 | ரமணோதயம் காப்புநிதி<br>தொடரும் நன்கொடையாளர்கள் | 51 |
| 7 | பசுவின் கழுத்தில் கயிறு<br>சேலம் சேதுகுமாரன் | 52 |
| 8 | மாயாஜாலத்திலிருந்து மீள்வோம்<br>கௌதமன் | 55 |
| 9 | பகவானின் ‘‘ஆன்ம வித்தையை விளக்கும்<br>‘ஆழ் துயிலின்’ அரிய தத்துவங்கள்’’ | 61 |
| 10 | சுவர்மறை சோலை ஜா. ஜயராமன் | 68 |
| 11 | நூல் அறிமுகம்: கடைசி வார்த்தைகள் | 71 |
| 11 | செய்திகள் | 74 |

# ஆசிரியர் உரை

## தாய் காலைப் பற்றிய சேய்

வாழ்நாள் முழுவதும் நாம் ஆனந்தத்தைத் தேடிக் கொண்டே இருக்கிறோம். அது கிடைப்பதில்லை. ஏனெனில், அதைத் தவறான இடத்தில் தேடுகிறோம். உலகியல் பொருட்களில் தேடுகிறோம், மனைவி, மக்களிடம் தேடுகிறோம், பெருமையிலும், புகழிலும் தேடுகிறோம். ஆயினும் அது கிடைப்பதில்லை. ஏனெனில், ஆனந்தம் இருக்குமிடம் வெளியே அல்ல, நம் உள்ளத்திலேயே அது உயிர்த்துடிப்புடன் உள்ளது. ஓர் இரவு முல்லா நஸுருதீன் எதையோ தெருவில் உள்ள விளக்கினடியில் மிகத் தீவிரமாகத் தேடிக் கொண்டிருந்தார். அவர் நீண்ட நேரம் தீவிரமாகத் தேடுவதைக் கண்ட மக்கள் அவருக்கு உதவ எண்ணி அவருடன் சேர்ந்து தாங்களும் அவர் தவற விட்டது சாவி ஒன்றை என்று அறிந்துகொண்டு தேட ஆரம்பித்தனர். ஆனால் வெகு நேரம் ஆகியும் யாருக்கும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகையால் அவர்கள் முல்லாவிடம் அவர் சாவியை எங்குத் தவற விட்டார் என்று கேட்க, அவரோ தான் சாவியைத் தெருவின் ஓரத்தில் தவற விட்டதாகக் கூறினார். சலிப்புற்ற மக்கள், 'பின் ஏன் எங்கோ தவற விட்டதை விளக்கினடியில் தேடுகிறீர்கள்?' என்று கேட்டதற்கு, முல்லா என்ன கூறினார் தெரியுமா? "நான் அங்கேயே தேடியிருப்பேன்; ஆயினும் விளக்கு

இங்கு உள்ளதால் இங்குத் தேடுகிறேன், இருட்டில் சாவியைத் தேட இயலுமா?" என்று. அது போலதான் ஆனந்தமும் அது எங்கு உள்ளதோ அங்குத் தேடினால் தான் அகப்படும், அதை விடுத்து நிலையில்லா க்ஷணநேர இன்பம் தருகின்ற செயல்களனைத்திலும் இருப்பதாக எண்ணி ஏமாறலாமோ?

ஆற்றில் நாம் கை தவறவிட்ட ரத்தினம் நீர் கலங்கி இருப்பின் கிடைக்காது. நீர் தெளிவாகக் கலக்கமின்றி இருக்க வேண்டும். அது மட்டுமின்றி, நாம் கூர்ந்த மதியுடன் உள் நோக்க வேண்டும். சுக துக்கம் மாறி மாறி வரும் உலகில் நம் மனம் அலை போல அலைகிறது. வேண்டிய பொருள் கிடைக்கும்போது கிளர்ச்சி உண்டாகிறது. வேண்டிய பொருள் கிடைக்காவிடின் அல்லது கிடைத்த பொருள் கைவிட்டுப் போகும் போது தளர்ச்சி உண்டாகிறது. கிளர்ச்சியும், தளர்ச்சியும் இல்லாமல் மனம் அசைவற்று இருந்தால், உள்ளத்திலுள்ள ஆனந்தத்தை நாம் அனுபவிக்கலாம். பகவான் அருள் அவதாரம். அவர் தமது 'சித்' தில் உள்ள ஆனந்தத்தைத் தேடாமலே அடைந்து அந்த ஆத்மானந்தத்திலேயே வாழ்ந்தவர். நமக்கு அந்த அனுபவம் கிடைக்க வேண்டுமெனில், நமது மனத்தின் இயக்கம், நிலையற்ற அசைவு நிற்க வேண்டும்.

தேடா துற்றநல் திருவருள் நிதியகத்து
இயக்கம் தீர்த்தருள் அருணாசலா!

(அக்ஷரமணமாலை)

என்று மனத்தின் இடைவிடாத அசைவு நிற்க வேண்டும் என நம்மை இறைவனிடம் பிரார்த்திக்க அறிவுறுத்துகிறார்.

'சினம் அடங்கக் கற்றாலும்
சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம் அடங்கக் கல்லார்க்கு
வாயேன் பராபரமே!'

என்று தாயுமானவரும் கூறுகிறார் அல்லவா?

*பகவான் கூறும் ஓர் அத்தகைய உதாரணத்தை நினைவு கூர்வோம். தமது மரணானுபவத்தின் பின் இறையானுபவம் இடையறாது தமது, ஆழ்மனத்தில் தொடர்ந்து இருத்தலைக் குறிப்பிடும் பகவான், எப்படி ஒரு சங்கீதக் கச்சேரியில் பாடல்களுக்குத் தக்கபடி ஸ்வரங்களை மாற்றினாலும் ஆதாரஸ்ருதி மட்டும் மாறாமல் தொடர்ந்து ஒன்றாகவே இருக்கிறதோ, வெளி வாழ்க்கையில் அது போல 'நான் எந்தச் செயலைச் செய்து கொண்டிருந்தாலும், என் ஆழ்மனதில் இந்த நான்-நான் எனும் இருப்புணர்வு இடையறாது ஸ்புரித்துக் கொண்டு இருந்தது' எனக் கூறுகிறார். ஸ்ரீ கிருஷ்ணர் இதனையே கீதையில் 'ஸமத்வம்' என்று குறிப்பிடுகிறார்.*

*இந்தச் சமத்வ நிலையை விளக்கும் ஆழமான தமிழ்ப் பாடல் ஒன்று உள்ளது.*

*எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவத்தைப் பட்டாலும்*
*முத்தர் மனமிருக்கும் மோனத்தே - வித்தகமாய்க்*
*காதி விளையாடி இருகை வீசி வந்தாலும்*
*தாதி மனம் நீர்க் குடத்தே தான்!*
*(அவத்தை - அவஸ்தை, நிலை)*

*கிராமங்களில் பெண்டிர் ஆற்றிற்குச் சென்று தண்ணீர் கொண்டு வருவார்கள். தலையில் ஒரு குடமும், அதன் மேல் ஒரு செம்பில் நீரும் கொண்டு, கைவீசி நடந்து ஊர் விவகாரங்களைப் பேசிக் கொண்டு வருவார்கள். அப்படி வந்தாலும் தலையில் உள்ள குடங்கள் விழாதபடி, தலையை அசைக்காமல் ஒரு நிதானத்துடன் நடந்து வருவார்கள். ஞானியின் உள்ளமும் அது போலதான். எக்காரியத்தில் அவர்கள் ஈடுபட்டாலும் எப்பொழுதும் அசைவுறாமல் சமத்துவத்திலேயே நிலை பெற்று இருக்கும்.*

*இத்தகைய சமத்துவ நிலையை எப்படி அடைவது, 'அற்றது பற்று எனின் உற்றது வீடு' என்று ஆழ்வார் கூறுகிறார். பற்று எல்லாவற்றையும் அறவே ஒழிக்க*

வேண்டும் என்பது வழி. ஆயினும், நம் போன்ற சாமான்யருக்கு எல்லாப் பற்றுகளையும் ஒரு சேர விடுதல் என்பது சாத்யமா? அதற்கு வழி மாற்று வழி, உலகப் பற்றுகள் இருக்கும் போதும், குருநாதன் மீது பற்று கொள்ள வேண்டும். தூய்மையான ஆற்றுத் தண்ணீரைக் குடிக்க ஒருவன் சேற்றுக் கையுடன் செல்கிறான். சேற்றுக் கையுடன் தண்ணீரைக் குடிக்க முடியாது. எனவே, முதலில் அந்த ஆற்றுத் தண்ணீரிலேயே கையைக் கழுவிக் கொள்கிறான். பின் அந்தத் தண்ணீரை அருந்துகிறான். அது போலவே, பகவானைப் பற்றிக் கொண்டால் சேறு போன்று உள்ள உலகப் பற்று போகும், பின் அவனுடன் ஒன்றலாம்.

பகவானுக்கு இறையனுபவம் 'தேடாது உற்ற திருவருள் நிதி'. ஏனெனில், அவர் பற்றே அற்றவர். நாள்தோறும் கண்ட பொருட்களில் எல்லாம் ஆசை கொண்டு, எல்லாவற்றிலும் மனதைப் பதித்துக் கொண்டு, எதிலிருந்தும் விடுபட முடியாமல் தவிக்கின்ற நமக்கு, அந்த நிலையிலிருந்து மீள்வதற்கு ஒரே வழி, பகவானைப் பற்றிக் கொள்வதே. அவன் திருப்பாதமே மெய்த் துணை. மெல்ல நடந்து பழகுகிற குழந்தை தாய் நடக்கும்போது அவள் கால்களைக் கட்டிக் கொள்கிறது. அந்தக் குழந்தை தாயின் முழங்காலுக்குத் தான் வரும். ஆகையால் முழங்காலைப் பற்றிக் கொள்கிறது. நாமோ, அகண்டாகார வடிவமாகிய பகவானின் திருவடி அளவு கூட இல்லை. எனவே, இயன்ற அளவு முயன்று அவனது திருவடியைப் பற்றிக் கொண்டு ஆன்மீக சாதனையில் நடை பயில்வோம்.

நமக்கு உலக வாழ்வில் வரும் பற்றுக்கள் அனைத்தும் நாமே வரவழைத்துக் கொண்டவை. இவற்றின் காரணமாக சற்றும் ஆன்மீக சாதனை செய்ய நேரம் ஒதுக்காமல், உலகசார் கார்யங்களிலேயே ஈடுபடுகிறோம். மற்ற காரியங்களைத் தள்ளிப் போடுவதில்லை. ஆன்மீக

சாதனை செய்வதை மட்டும் தள்ளிப் போட்டுக் கொண்டே இருக்கிறோம். இவ்வாறின்றி, எந்தச் செயல் செய்தாலும், செய்யாவிட்டாலும் இறைவனைத் தியானம் செய்வது அவசியம் என்ற உணர்வு இருந்தால், எப்படியாவது அந்த நேரத்தில் நாமாகவே தனிமையை நாடி தியானம் செய்வோம்.

'ஸ்ரத்தாவான் லபதே ஞானம்'. சிரத்தை உள்ளவன் ஞானத்தை அடைகிறான் என்கிறான் கண்ணன். ஆன்மீக சாதனை தவிர்க்க முடியாத அவசியம் என்று உணர்ந்தால், எப்படியாவது ஆன்மீக சாதனையை விடாமல் செய்து விடுவோம். அலுவலகத்தில் ஏராளமான வேலை உள்ளவன், வீட்டிற்குச் செல்ல சமயம் கிடைக்கவில்லை என்றால், இருக்கும் இடத்திற்கே உணவை வரவழைத்து உண்கிறான். டிரெயினில் சென்னையிலிருந்து, டில்லி செல்பவன் உணவு நேரம் வந்து விட்டால். ஏதேனும் வாங்கி உண்கிறான். மற்றக் காரியங்களைச் செய்யும் போது உண்ண வேண்டிய அவசியம் இல்லை என்று அதை ஒதுக்குவதில்லை, எப்படியாவது உண்ணுவ தற்கும், உறங்குவதற்கும் மற்ற வேலைகட்கு இடையில் நேரத்தைக் கண்டு பிடித்துக் கொள்கிறோம். ஆன்மீகச் சாதனையில் உண்மையான சிரத்தை இருந்தால், எந்த நிலையிலும், எந்தச் சமயத்திலும் உணவு உண்பது போல, சாதனையைச் செய்து விடுவோம். அப்படிச் செய்யாததற்குக் காரணம் ஆன்மீகம் மிகவும் முக்கியம் என்று எண்ணாது மற்ற பொருட்களின் மீது பற்றுக் கொள்வதே.

பகவானைப் பற்றி எண்ணும்போதே அவன் திருவடியை நினைக்கும்போதே நம் உள்ளத்தே அன்பும், ஆனந்தமும் பெருக்கெடுக்க வேண்டும். கேரள நாட்டுக் கோயில்களில் பிரார்த்தனைக்காக குழாய் வெடி வெடிப்பார்கள். வெடி மருந்தை ஒரு மூங்கில் குழாயில் அடைத்து வைத்திருப்பார்கள். அதில் ஒரு திரி வெளியே

நீட்டிக் கொண்டிருக்கும். அந்த வெடி வெடிக்க வேண்டுமானால் குழாயில் வெடி மருந்தை அடைத்திருக்க வேண்டும், பின் வெளியை நீட்டிக் கொண்டிருக்கும் திரியில் நெருப்பு வைக்க வேண்டும். வெடிமருந்து அடைக்காமல் இருந்தால், தீ வைத்தாலும் வெடிக்காது. வெடி மருந்து இருந்து திரி வைக்கா விட்டாலும் வெடி வெடிக்காது. நெருப்பும் அவசியம். வெடிமருந்தும் அவசியம். நெருப்பு போல இருப்பது பகவானின் திருவருள், வெடிமருந்து என்பது நமது சாதனை. நம்முடைய சாதனை தீவிரமாக இருந்தால், பகவான் திருவருள் பாய்ந்து ஆனந்த தரிசனம் பெறுவோம். இல்லையேல் வெற்றுணர்வு தான் மிஞ்சும். நமது சாதனையும் குரு அருளும் சேரும் போது, அகக்கண் திறக்கும். உலகமே ஆத்மமயமாக அதன் உண்மை வடிவமாக விளங்கும். உள்ளத்திலே பகவான் அருள் என்ற ஒளியை ஏற்றிக் கொள்ளும் போது அகந்தை அழிகிறது. குமரகுருபரர் மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில், மீனாட்சி அம்மையை “அடியார்கள் அஹங்காரம் அழிந்த தம் உள்ளத்தில் விளக்காக ஏற்றிக் கொள்கிறார்கள்” என்று கூறுகிறார். விளக்கு ஏற்றும் வரை உலகம் இருளில் மூழ்கி இருக்கும் அல்லது கயிறு பாம்பாகத் தோன்றுவதுபோல் அரைகுறை இருட்டில் தவறாகத் தெரியும். விளக்கை ஏற்றிய பின், உலகம் தன் உண்மை ஸ்வரூபத்தில், ஆன்ம ஸ்வரூபத்தில் விளங்குகிறது.

அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும்
தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே!

என்று போற்றுகிறார் குமரகுருபரர்.

ஆன்ம சாதனைக்கு மற்றொரு தேவை, ‘சத்சங்கம்’. நாம் யாரோடு சேர்கிறோமோ, அதற்கு ஏற்றபடி நம் உள்ளத்தில் நினைப்பு உண்டாகும். வியாபாரியுடன் சேர்ந்தால் வியாபாரத்தைப் பற்றிய எண்ணமே மனதில்

வளரும். சூதாடுபவர்களுடன் சேர்ந்தால், சூதாடும் எண்ணம் உருவெடுக்கும். அறிவாளிகளுடன் சேர்ந்தால் அறிவு பெற வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். இறையருள் பெற்றவர்களோடு சேர்ந்தால், நமக்கும் அந்த அநுபவம் வர வேண்டும் என்ற ஆவல் எழும். இறைவனது அருள் மலர் நிரம்பிய பந்தல் என்றால் பந்தலுக்கு நமது ஆன்மாவாகிய கொடியை ஏற்றி விடுகின்ற கொழுகொம்பே சத்சங்கம். இந்தச் சத்சங்கமும் இறைவன் அருளால்தான் கிடைக்கின்றது.

'அடி' என்றால் பாதம் என்று பொருள். அதே சமயம் அச்சொல்லுக்கு அஸ்திவாரம் என்றும் பொருள் உண்டு. பகவானின் திருத்தாள்கள், உலகம் அனைத்துக்கும் மூலப் பொருளாகவும் அஸ்திவாரமாகவும் நிற்பவை. 'தாவோயிசம்' என்ற சமயத்தில், 'தாவோ' என்ற சொல்லுக்கு இறையனுவபம் ஆகிய குறிக்கோள் என்றும் அதை அடைகின்ற பாதை என்றும் ஒரே சமயத்தில் இரு பொருள் வரும். பகவான் திருவருளும் அதே போன்று, நமக்கு அஸ்திவாரமாகவும் மேல் செலுத்தும் கொழு கொம்பாகவும் ஆகிறது.

நாம் ஆரம்பத்தில் கண்டபடி நமது மனம் ஒரு கணம் கூட நிலைத்து நில்லாது, ஒரு கணத்தில் பல்லாயிரம் எண்ணங்களை வளர்த்துக் கொண்டு, அலைந்து திரியும் இயல்பு உடையது. உயர்ந்த நிலையை அடைவதற்கு உரிய ஆத்ம சாதனைகளை கைக்கொள்ளாவிடில், சேற்றில் புரளும் கொடி போல பிரபஞ்சச் சேற்றில் உழன்று திரியும் கொடி, கொம்பின் வழியே ஏறி பந்தலை அடைந்து அங்கே மலர்ந்து பயன்பெறுவது போல், பகவானின் திருவடிகளாகிய கொழுகொம்பினைப் பற்றிக் கொண்டு மேலே போய், ஆத்ம சாட்சாத்காரத்தில் படர வேண்டும். விதையைப் போடுவது மண்ணில், ஆனால் மரம் உயர்வதோ விண்ணில். எனவே, உலகில் நம் கர்ம வாசனையால் தோன்றினாலும், நம் எண்ணத்தை

*ஆத்ம சாதனையில் வைத்துப் பழகினால் அது மேலே உயர்கிறது.*

*பகவானின் திருவடிச் சிறப்பை முருகனார் திருவடித் திருத் தசாங்கத்தில் சிறப்புற பொழிகிறார்.*

*'அளக்கலாது எவ் அளவையாவும்*
*அதீதமாய் நின்ற அனந்தன் அடி*
*துளக்கம் அறத் திருத் தொண்டருக்கு*
*தொன்று தொட்டு என்றும் துணையாம் அடி*
*விளக்கம் உறப் பரமுத்தி இன்பம்*
*விளைந்து உளத்து அன்பர் துளைந்த அடி*
*இளக்கம் ஒழித்து என்னை ஆண்ட பெம்மான்*
*எந்தை ரமணன் எழில் சேவடி'*

*பகவானின் திருவடிச் சிறப்பினை "எந்த அளவுகோலாலும் அளக்க முடியாது. எல்லாவற்றையும் தாண்டி நிற்கும் எல்லையற்ற எம்பெருமானின் திருவடி, அடியார் கவலை முற்றும் நீங்கும்படி அந்நாள் தொடங்கி இந்நாள் வரை அவருக்குத் துணையாய்க் காக்கும் திருவடி. உள்ளத்தே ஆன்ம ஒளி விளங்க, அடியார்களை பரமுக்தியில் சேர்த்து அவர்களைப் பரமானந்தத்தில் திளைக்க வைக்கும் திருவடி, எனது அருட் தந்தையாம் ரமணனது எழில் பொருந்திய திருவடிகள். எனது குற்றங்களை அழித்து, எனை முற்றிலும் ஆண்டு கொண்டன!" என்கிறார் முருகனார்.*

*ஆன்மீக சாதனையின் முக்கியமான தேவை உள்முகப் பார்வை. வெளியில் செல்லும் மனதை உள் நோக்கித் திருப்பிப் பார்க்கும், தன்னையே பார்க்கச் செய்வது, கோள்கள் அனைத்திற்கும் ஒளி தருகின்ற சூரியன் கூட இன்னும் பல ஆண்டுகட்குப் பின் தீர்ந்து விடும், ஏனெனில் சூரியன் ஒளி முழுவதும் வெளியே சென்று கொண்டு இருக்கின்றது. அது ஒரு பிரம்மாண்டமான அணு உலை. அதிலிருந்து கதிர் வீச்சு மூலம் ஒளியும் வெப்பமும், வெளியே இடைவிடாது சென்று கொண்டு*

*இருக்கிறது. கபீர் கூறுகிறார்:'நீங்கள் சூரியனை விட மிக அதிகமான சக்தி வாய்ந்தவர்கள், ஆயிரக்கணக்கான சூரியன்கள் ஒரேயடியாக எரியும் அளவிற்கு உங்கட்குள் ஒளி பிரகாசித்துக் கொண்டு இருக்கிறது. ஆனால் வெளியே சென்று அது அனைத்தையும் வீணடித்து விடுகிறாய் . ஆகையால் வெறுமை மட்டுமே மிஞ்சுகிறது.*

*எந்த அளவிற்கு வெளி உலக விவகாரங்களில் நாம் ஈடுபடுகிறோமோ அது வரை மனமும் அலைந்து கொண்டே இருக்கும். பகவான் கூறுவதுபோல் நம் உள்ளே எழும் அந்த ஆதார சுருதியில் நிலைத்தோமே யானால் வெளி உலகம் நம்மைப் பாதிக்காது.*

*ஒரு ஜெர்மானிய தத்துவஞானி தனது டயரியில் எழுதி உள்ள நிகழ்ச்சி இது. அவர் ஒரு ஜென் குருவிடம் பல நாள் பயின்று வந்தார். அவர் திரும்ப வேண்டிய சமயம் வந்தது. அவருக்குப் பிரிவு உபசார விருந்து மூன்றாம் மாடியில் அமைக்கப்பட்டு இருந்தது. ஏராளமானவர்கள் அங்கே கூடியிருந்தனர். ஜென் குரு தனது உபதேசத்தை ஆரம்பித்துப் பேசினார். அப்போது ஜப்பானில் அடிக்கடி நிகழ்வது போல திடீரென்று பூகம்பம் வந்தது. அவர்கள் அனைவரும் ஆடத் துவங்கினர். கூடியிருந்தோர் அனைவரும் கீழே இறங்கி ஓட ஆரம்பித்தனர். தத்துவ ஞானியும் மாடிப்படி நெரிசலில் புகுந்து கீழே போகத் துவங்கினார். அப்போதுதான் குருவின் நினைவு வந்தது. திரும்பவும் மூன்றாம் மாடிக்கு ஏறிப் பார்த்தார். குருநாதர் கண்ணை மூடிக் கொண்டு அமைதியாக சற்றும் அசையாமல் இருந்த இடத்திலேயே அமர்ந்திருப்பதைக் கண்டார். குருநாதர் அமைதியாக அசையாமல் இருந்த இடத்திலேயே அமர்ந்திருக்கும்போது நாம் மட்டும் ஓடித் தப்பிக்கலாமா? என்று எண்ணி, அவரும் அங்கேயே அமர்ந்துவிட்டார். ஆயினும் பூகம்ப அதிர்வினால் அவரது உடலும் அதிர்ந்தது. எங்கும் ஒரே கூச்சலும் குழப்பமும் நிறைந்திருந்தது. பூகம்பம் நின்றவுடன்*

*எல்லோரும் உபந்யாசத்திற்குத் திரும்ப வந்தனர். குருநாதரோ, எதுவுமே நிகழாததுபோல் எங்கே சொற்பொழிவை நிறுத்தினாரோ, அங்கிருந்து மீண்டும் தொடங்கினார். உடனே தத்துவ அறிஞர் 'முன் சொன்னது போகட்டும். நான் இப்போது வேறு கேள்வி கேட்கிறேன். இப்போது வந்ததே பூகம்பம் அது பற்றிக் கூறுங்கள்!' என்றார். குருநாதர் பதிலளித்தார்: 'அது எப்போதுமே வெளிப்புற சம்பந்தம் உடையது. அது உள்பக்கம் தாக்காத வரை எம்மதிப்பும் கிடையாது. வெளியே எல்லாமே அதிர்ந்து கொண்டிருந்தன. நானோ எனது உள்மையத்தில் உள்ளேன். அங்கே எவ்விதமான அதிர்வுமே கிடையாது. இதுவே ஆன்ம ஞானம். எவ்வித அதிர்வும், அலையும் ஏற்படாத உள்மையத்தில் நிலைத்திருப்பதே அது'.*

*குருநாதன் தன்னை ஆண்டு கொள்ளும் திறத்தை முருகனார் எழிலுறக் கூறுகிறார்.*

*நின்னுரு என் நெஞ்சில் நிறுத்தினாய்: நீக்கமற*
*என்னுயிர் நின் தாள்கீழ் இருத்தினாய் -பின்னும்*
*சிதானந்த வெள்ளமும் தேக்ககினாய் நின்பேர்*
*உதாரம் தனக்குண்டோ ஒப்பு.*

*பகவானே! என் மனம் வேறு எங்கும் அலையாதபடி உன்னுடைய திரு உருவத்தை என் இதயத்தில் நிலை பெற வைத்தாய். பின்னர் நான் அகலாதபடி என்னுடைய உயிரை உனது திருவடிக் கீழ் இருத்தி வைத்தாய். உன்னுடைய பேரருளுக்கு ஒப்பு உலகில் வேறு இருக்கிறதா? (இல்லை).*

*பகவானின் திருஉருவைக் கண்ணால் கண்டு இதயத்தில் வைத்து மகிழ்வது முதல் படி. அவனை விட்டு எண்ணம் சிறிதும் அகலாது அவன் திருவடி களையே சிந்திப்பது இரண்டாம் படி. அப்போது ஏற்படுகின்ற அத்வைத அநுபவத்தால் இடையறாது பெருகும் பரமானந்த வெள்ளத்தில் திளைப்பது மூன்றாம் படி.*

சுந்தரமூர்த்தி நாயனார் தில்லை நடராசப் பெருமானை முதலில் கண்ணால் கண்டு, இதயத்தில் இருத்தினார். பின்னர் தன் முனைப்பு முற்றும் இழந்து இறைவனிடம் சரண் புகுந்தார். பின்னர் இடையறாத ஆனந்த வெள்ளத்தில் திளைத்த பரமானந்த நிலையை அவரே பாடுவதைக் காணலாம்.

'ஐந்து பேர் அறிவும் கண்களே கொள
அளப்படும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆககுணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்விகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் களிப்பெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்'

மாறிலா மகிழ்ச்சியில், ஆனந்த சாகரத்தில் மூழ்கி மகிழும் சுந்தரருக்கு இந்திரியங்கள் அனைத்தும் அடங்கி ஆத்மாவில் ஒன்றிய அனுபவம் ஏற்படுகின்றது. இதற்கு ஆரம்பமாய் இருப்பது, இறைவனைக் காணும் காட்சி. உள்முக நோக்குடன் பார்க்கும்போது, மனம் திரும்பி, பொறிகள் அடங்கும் நிலை வருகின்றது. ஒரு பொறியில் இந்திரியங்கள் ஈடுபாடு மிகுந்து இருக்கும்போது மற்றப் பொறிகள் ஆற்றலை இழக்கின்றன. முதன்முதலில் நாயனார் கண்கள் இறைவன் திருவுருவை பார்க்கத் தொடங்கியது. மற்றப் பொறிகள் தமது ஆற்றலை இழந்தன. ஒலி அவரது செவியில் விழவில்லை. மெய் தென்றலை உணரவில்லை.

நாக்கு சுவையை உணரவில்லை. மூக்கு நறுமணத்தைத் தேடவில்லை. ஐந்து பொறிகளின் அறிவையும் கண்களே பெற்றுக் கொண்டன. அதன் வாயிலாக உள்முக நோக்கு தொடங்கியது. அடுத்தபடி அவரது அந்தக்கரணம் வேலை செய்யத் தொடங்கியது. மனம், புத்தி, அஹங்காரம், சித்தம் என்னும் நான்கு கரணங்களில்,

ஒன்றைப் பற்றி நிற்பது சித்தம். மற்ற மூன்றும் அடங்க, சிற்றம்பலப் பெருமானைக் கண்ட கண்கள் உள்நோக்கம் பெற சிந்தையில் சிவத்தியானம் மட்டுமே உரம் பெற்றது. அப்போது மனதில் மூன்று குணங்கள் அடங்க சத்துவ குணம் மட்டுமே மலர்ந்தது. அப்பொழுது, தியானம் மேலும் வலுப்பெற்று, சத்துவ குணத்தையும் தாண்டிய அத்வைத ஆனந்தத்தில் அடியார் ஒன்றினார். உள்நோக்கி செல்லும் பயணத்தில் கண் வாயில், வழி சிந்தை இறுதியில் அடையும் இடம் ஆத்மா.

'தொண்டர் கண்டு அண்டி, மொண்டு, உண்டிருக்கும்
சுத்த ஞானம் எனும் தண்டையம் புண்டரிகம்'

என்று அருணகிரி இறைவன் திருவடிகளைப் பாடுகிறார்.

பகவானின் திருவடிகளைக் கண்ணில் காண்பது முதல் படி. அப்படிச் செய்யும்போது அநுபவத்தின் எல்லையில் கால் வைக்கிறோம். பின்பு புறக்கண்ணால் கண்டதை அகக் கண்ணால், உள்நோக்கிய திரும்பிய பார்வையில் காண்கிறோம். அந்த நிலையினின்று உள்ளே ஆழ்ந்து, ஆத்மாவுடன் இணைந்து அனுபவம் பெற வேண்டும். புறக் கண்ணால், கண்ட போது அழகிய கமலம் போன்று தோன்றிய பகவானின் திருவடிகள், அப்போது சுத்த ஞானமாகத் தோன்றுகின்றன. அப்போது முடிந்த அனுபவமாகிய ஆத்மாநுபவம் அடையப் பெறுகிறது.

நம் போன்ற சாமான்யருக்கு பகவானின் திருவுருவம், திருவடிகளில் மனத்தைச் செலுத்துவதே ஆத்மாநுபவம் பெற முதல் படி. அலையாத மனத்துடன் செய்யப்படும் இந்த நோக்கு, படிப்படியாக நம்மை இறையானுபவத் திற்கு இட்டுச் செல்லும். இதையே முருகனார் பாடல் குறிப்பிடுகிறது. பகவானை அண்டிய அடியார் பலரின் அனுபவம் இதுவே. அவர்கள் பகவானைக் கண்டு அவரை அண்டி, அவரது பொழிகின்ற அருளைத் தம் அடங்கிய மனம் என்னும் பாத்திரத்தில் மொண்டு அதனை உண்டு ஞானம் பெற்று அத்வைத அனுபவம்

பெறுகின்றனர். பகவான் திருவடித் தியானம் இதற்கு வழிகூட்டுகிறது.

பகவானின் அத்யந்த சீடரான அண்ணாமலை ஸ்வாமிகள் ஆன்மீக வழிகாட்டுதல் விரவிக் கிடக்கும் தமது கடைசி வார்த்தைகள் நூலில் இந்த அத்வைத அனுபவம் பெற வேண்டிய வழிகளைப் பற்றிக் கூறுவதைக் காண்போம். 'சாதனை செய்வதற்கு உடம்பு தேவைப்படும் போதிலும் ஒருவர் அதனோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளக்கூடாது. நாம் அதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் ஆனால் அதன் மீதே தீவிர கவனம் செலுத்தக்கூடாது'.

மனதில் ஏராளமான நினைப்புகள் இருக்கின்றன. ஒரு நினைப்பிற்கு பிறகு மற்றொன்று வரும். அவை நிற்பதே இல்லை. ஆனால், பெரும்பாலும் அடி மனதில் ஒரு நினைப்பு மட்டும் தொடர்ந்து இருந்து வரும். 'நான் இந்த உடம்பு' என்பதே அந்த நினைப்பு. மற்ற எல்லா நினைப்புகளையும் இணைக்கும் நூல் இதுவே. இந்த நினைப்பை நினைந்து, நம்மை நாமே இந்த உடம்பாக அடையாளப் படுத்திக கொண்டதுமே, மாயை தொடரத் துவங்கி விடும். இப்படி நம்மை நாமே உடம்பாக அடையாளப் படுத்து கொள்வதை நிறுத்திவிட்டால் அதன் பிறகு மாயை நம்மை பாதிக்காது.

'நான் இந்த உடம்பு' என்ற வலுவான எண்ணத்தையும் அதனால் உண்டாக்கப்படும் மாயையும் எப்படி போக்குவது, சமபாவம் இருக்கும்போது, அதாவது உள்ளச் சமநிலை அல்லது இன்பதுன்பமோ, மகிழ்ச்சி, வேதனை போன்ற நேரெதிர்ப் பண்புகளால் பாதிக்கப்படாது, சமநோக்கு இருக்கும்போது, அது போய்விடும். சமபாவத்தை அடைந்து விட்டால், உடல் 'நான்' என்ற எண்ணம் இருக்காது, மாயையைக் கடந்து விடுவோம்.

'உடம்பு பொய் என்றும் நான் அல்ல' என்றும் கருதப்பட வேண்டுமா? இந்த உடம்பின் மீதும், இது தரும் புலன் வழி பலன்கள் மீதும் நாம் எத்தகைய மனப் பாங்கினை மேற் கொள்ள வேண்டும்?' என்ற கேள்விக்கு அண்ணாமலை ஸ்வாமிகள் விடையிறுக்கிறார். 'தன்னளவில் இந்த உடம்பு ஒரு ஜடம் அல்லது அசைவற்றது-உயிரற்றது. மனம் இல்லாமல் உடம்பால் இயங்க முடியாது மனம் எப்படி இயங்குகிறது உடம்பின் ஐம்புலன்கள் வழியாகத்தான். மனமும் உடம்பும் வாயிலுள்ள நாக்கையும், பற்களையும் போன்றவை. அவை ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்பட வேண்டும். பற்களும், நாக்கும் சண்டை போட்டுக் கொண்டால் அவை சீராக செயல்பட இயலாது. அது போன்றே மனமும், உடம்பும் ஒன்றொடோன்று இணைந்து செயல்படாவிட்டால் குழப்பமே மிஞ்சும்.

இக்குழப்பத்தைத் தவிர்க்க மனமும், உடம்பும் ஒன்றொடோடொன்று இணைந்து செயல்பட்டாக வேண்டும்.

பகவானின் உபதேசம் யாதெனில், உடல், மனம் அஹங்காரக் கூட்டணியை நாம் மெய்யான ஒன்று என்று எடுத்துக் கொண்டால் அதுவே அஞ்ஞானம். பகவான் கூற்றின்படி உண்மையில் அஞ்ஞானம் என்ற ஒன்று கூட இல்லை. அறியாமை தோன்றியவுடனே இந்த அறியாமை யாருக்கு என்ற கேள்வியை எழுப்ப வேண்டும். தீவிரமான உறுதியுடன் இந்த விசாரத்தைத் தொடர்ந்தால் சந்தேகங்கள் அனைத்தும் கரைந்து போய் வாசனைகள் இருக்கும் வரை அவை மேலெழுந்து மெய்ப் பொருளை மறைக்கின்றன. இதிலிருந்து விடுபட இடையறாக் கவனம் தேவை. எப்போதெல்லாம் வாசனைகள் எழுகின்றனவோ அப்போதெல்லாம் அதனுடன் யுத்தம் செய்யாமல், இவை எங்கே யாருக்கு எழுகின்றன என்று விசாரிக்க வேண்டும். இந்த இடைவிடாத விசாரணை


சாதகனை ஆன்மாவில் நிலை பெறச் செய்யும். மனம் என்ற பாம்பு எப்போதுமே இருந்ததில்லை.

இருப்பதெல்லாம் கயிறு என்னும் மெய்ப் பொருளே என்னும் உண்மை நம் மனதில் உறுதிப்படும். அப்போது ஐயங்கள் எழவே எழாது. உடல் மனதைத் தாண்டி ஆத்மாவுடன் இணைய நிரந்தரமான சத்சங்கம் நடைபெறும்.

பகவானுக்கும், ஜீவனாகிய பக்தனுக்கும் இடையே நீங்கா உறவு எப்படி உருவாகிறது அக்னிக்கும், அதன் பொறிக்கும் இடையே உள்ளது போலும், ஆழ்கடலுக்கும், அதனின்று எழும் மழை முகிலுக்கும், மலருக்கும், மணத்துக்கும் இடையை இருக்கும் உறவு போன்றது.

வெளியிலிருந்து ஏற்படுத்தப்பட்ட ஒன்று எப்படி இயல்பான ஒன்றாக இருக்கும்? பகவானுடன் நமக்கு உள்ள தொடர்பு உள்ளிருந்து வருவது.

"உருத்தெரியாக் காலத்தே உட் புகுந்து கருத்து இருத்தி ஊன் புக்கு கருணையால் ஆண்டு கொண்டான்" என்று திருவாசகத்தில் மணிவாசகர் எனது உருவமே தோன்றாத யுகங்களுக்கு முன்னாலேயே எனது ஆத்மாவில் புகுந்து இதயத்தில் நிலை பெற்று தக்க தருணத்திற்காக காத்திருந்து, எனது கருத்தைத் தன்னை நோக்குமாறு திருப்பி அமைத்து, என்னைக் கருணையால் ஆண்டு கொண்ட குருநாதனாக காண்கிறேன். அவித்தையினால் ஆத்மாவிலிருந்து ஜீவன் தன்னை வேறாக எண்ணி எப்போது வெளிக் கிளம்புகிறதோ, அப்போதே அருளும் கிளம்பிவிடுகிறது. எந்த சூரியனின் வெப்பத்தினால் கடலிலிருந்து மேகங்கள் உற்பத்தியாகி எழுவதற்குக் காரணமாக அமைகிறதோ, அந்த வெப்பமே காற்றுப் படலத்தினை விரிவடையச் செய்து மேகங்களை வானவெளியில் ஓடச் செய்கிறது. அதேபோன்று, மாயையினால் ஆன்மாவிலிருந்து ஜீவன் எழும்போது




அப்போதே பிரம்மசக்தியே அருட்சக்தியாகக் கிளம்பி எழும்பும் ஜீவனின் உய்வுக்காக, அது மீண்டும் தன்னில் ஒன்றச் செய்வதற்காக வேலை செய்யத் துவங்குகிறது. கடற்காற்று கடலினின்றும் எழும்பி மேகக் கூட்டங்களை மலைப் பகுதிக்கு செல்லச் செய்து, அங்கே மழையாகப் பெய்யச் செய்கிறது. அந்த மழை நீர் பல வழிகளில் ஓடி இறுதியாகக் கடலினை அடைவதுபோல பரம்பொருளின் அருட்சக்தி ஜீவனுடனே நீக்கமற நிறைந்து ஈசனாகவும், தக்க தருணத்தில் குருவாகவும் தோன்றி, ஜீவனைப் பிறவிதோறும் வழிநடத்தி பக்குவப்படுத்தி தன்னுடன் ஐக்கியப் படுத்துகிறது. இந்தச் சாயுஜ்யம் நம் அனைவருக்கும் நிச்சயம் உண்டு என்று பகவான் உறுதி கூறுகிறார்.

கருத்துப் பரிமாறலைத் தொடர்வோம்!

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை

Dr. **ஏ.வி.ராஜகோபாலன்**

*பாரத தேசத்தின் புராதன கலாசாரத்திற்கும் பண்பாட்டிற்கும் மிகப் பெரும் தொண்டு ஆற்றியவர் யார் என்ற கேள்விக்கு மிகச் சுலபமான விடை கிடைத்து விடும். வேதத்தைத் தொகுத்து நமக்கு அளித்த மஹரிஷி வியாச பகவான்தான் அப்பெருமைக்கு ஏற்றவர். நம்முடைய சித்தாந்தத்திற்கு அப்பெருமான் ஆற்றிய பணி மகத்தானது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஸ்லோகங்களைக் கொண்ட மஹாபாரதத்தையும் பல புராணங்களையும் இயற்றிய சான்றோன். வேதாந்த சாரமான பிரம்ம சூத்திரத்தின் ஆசிரியனும் இவரே. கிருஷ்ண த்வைபாயனர் என்ற பெயர் கொண்ட இவர், வேதத்தை நான்காகத் தொகுத்து அளித்தமையால் வியாசர் என்ற பெயர் பெற்றார். வியாசர் என்றால் தொகுத்தவர் (*Editor*) என்று பொருள். இவரைப் பற்றிய ஒரு சிறு கதையினைப் பார்ப்போம்.*

*ஒருமுறை வயது முதிர்ந்த வியாச மஹரிஷி தன்னுடைய புதல்வரான சுகருடன் ஒரு ஆற்றின் கரையோரமாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு நீராடிக் கொண்டிருந்த பெண்கள், வியாசரைப் பார்த்தவுடன் நாணம் மேலிட்டுத் தங்களை உடைகளால் மறைத்துக் கொண்டார்கள். ஆனால் அடுத்து வந்த சுகரைப் பார்த்தவுடன் அவர்கள் எந்த விதமான க்லேசமும் இல்லாமல், நீராடிக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்டு வியந்த வியாசர் அவர்களிடம் சென்று வயது முதிர்ந்த என்னைக் கண்டு நீங்கள் நாணத்தை அடைந்தீர்கள். ஆனால் பதினாறு*

வயது நிரம்பிய கட்டிளம் காளையான என் மகனைக் கண்டு ஏன் அத்தகைய உணர்வைப் பெறவில்லை? என்று வினவினார். அப்பொழுது அப்பெண்டிர் சுவாமி இந்தக் கேள்வியை நீங்கள் தான் கேட்டீர்களே தவிர உங்கள் மகன் கேட்கவில்லையே! அதுதான் காரணம் என்று பதில் சொன்னார்கள். மகனின் மனப் பக்குவம் தனக்கு இல்லை என்பதை வியாசர் உணர்ந்தார்.

இந்தக் கதை கட்டுக்கதையாக இருக்கலாம். ஆனால் இது உணர்த்தும் தத்துவம் உயர்ந்தது. வசிஷ்டர் சக்தி, பராசரர் என்ற மகான்களின் பரம்பரையில் தோன்றிய வியாச பகவானுக்கே பிரம்ம நிஷ்டை பூரணமாகக் கூடவில்லை என்றால், அது மிகவும் கடினமான நிலை என்பதில் எந்த ஐயமும் இல்லை. அது சாதாரண சம்சாரிகளுக்குக் கிடைக்கவொட்டாத நிலை. வெறும் படிப்பினால் அடைய முடியாதது. நம் உணர்வுகளுக்குக் காரணமான மனம், தன் பாட்டிற்கு சென்று கொண்டிருக்கும். எத்தனைதான் அறிவு என்ற அங்குசத்தால் மனதைக் கட்டுப்படுத்த முயன்றாலும் மனம் பாபச் சேற்றில் மூழ்கி விளையாடுவதையே விரும்புகிறது. இதனால்தான் ஆதிசங்கர பகவத் பாதர் மம ஹ்ருதய கபிம் அத்யந்த சபலம் என்று மனதை சபலம் மிகுந்த குரங்கிற்குச் சமானமாகச் சொல்லுகிறார். கீதாசாரியனும் மனம் என்பதே தலைமையான இந்திரியம் என்ற உண்மையை இந்திரியானாம் மனஸ்சாஸ்மி என்று விபூதி யோகத்தில் சாதிக்கிறார்.

அதர்வண வேதம் -

தீய செயல்களைச் செய்யத் தூண்டுவது மனதில் உதிக்கும் எண்ணங்கள் தான். இதை ஒரு அழகிய அதர்வண வேத மந்திரத்தில் காணலாம்.

பரோபேஹி மனஸ்பாப கிமசஸ்தாநி சம்ஸஸி
பரேஹி நத்வா காமயே, வ்ருக்ஷாம் வ்னானி சஞ்சர...

(அதர்வண வேதம் 6.45)

*பாபியான மனத்தை விலகிச் செல்லும்படி கூறுகிறார், வேத காலத்து மாமுனிவர். (ஞானம் செறிந்த அவருக்கு மனதின் பால்) ஏனிந்த வெறுப்பு. நாம் எண்ணாததை, சொல்லாததை இந்த மனமல்லவா சொல்கிறது. ஏன் இந்தப் பாப அவஸ்தை. ரிஷி மேலும் கூறுவார். மனமே! நான் உன்னை விரும்பவில்லை. என்னை விட்டு விட்டு காடுகள், மரங்கள் இவற்றை நோக்கி ஓடிச் சென்று விடு. இது சற்று விசித்திரமான வாதம். நான் வேறு, மனம் வேறா? நான் சிந்திக்க விரும்பாததை மனம் தன்னிச்சையாகச் சிந்திக்க முடியுமா? இருபத்தி யொன்றாம் நூற்றாண்டின் அவசர யுகத்தின் பிரதிநிதிகளான நமக்கு இதன் பொருள் எளிதில் புரியாது. ஆனால் நாம் ஒரே ஒரு நாள் மட்டும் என் எண்ணங்களைத் தணிக்கை செய்வேன் (*thought-audit*) என்று முயன்று பார்த்தால், மனதின் வேகமும், நம்முடைய பலஹீனமும் புலப்படும். கீதையில் அர்ஜுனன் வினவுவான்: நாம் விரும்பாவிட்டாலும், ஒரு உந்து சக்தியால் செயல் படுத்தப்படுகிறோம், அல்லவா?, இது ஏன் என்று இச்சக்தியை மஹரிஷிகளும், பண்டிதர்களும் கூட அறிய இயலவில்லை. அதே சமயம் ஆரம்பத்தில் பார்த்த வேத வியாசர் கதையின்படி சுகர் போன்ற மகனீயர்கள் மிக இளம் வயதிலேயே பற்றற்ற பிரம்ம நிலையை அடைந்து விடுகிறார்கள். நம்மாழ்வார் பிறந்த முதல் பதினாறு ஆண்டுகள் எந்த வித சேஷ்டையும் இன்றி ஒரு புளிய மரப் பொந்தில் சலனமற்றுக் கிடந்தார். மதுர கவி ஆழ்வார் அவருடைய மௌனத்தைக் கலைக்க, அவர் அற்புதமான, ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாசுரங்களை இயற்றினார். இவரை ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தில் ஆழ்வார்களில் முதல்வர் என்று போற்றுகிறார்கள். ஆனால் இவர், இதற்குத் தன்னுடைய ஆற்றல் என்று எதுவும் காரணம் இல்லை என்பதை ஆம் முதல்வன் என்று தேற்றி.. என்ற பாடலில் விளக்குகிறார். இறைவனே தனக்கு வேண்டிய பக்தர்களைத் தேர்வு*

செய்கிறான் என்பதே நம்மாழ்வாரின் கூற்று. இதை நோக்குங்கால், தனி மனிதன் பிரம்மத்தை சுய முயற்சியால் அடைவது இயலாது என்பதே சான்றோர் காட்டும் வழி என்று கிட்டத்தட்ட முடிவு கட்டிவிடுகிறோம்.

ரமண சித்தாந்தம்:

ரமணர் இந்தக் கருத்தை மிக அழகாக அக்ஷரமணமாலையில் சொல்லுகிறார்.

மொட்டை அடித்து எனை வெட்ட வெளியில் நீ
நட்டமாடினை என் அருணாசலா!

(அக்ஷரமணமாலை 85)

என்னுடைய அகங்கார, மமகாரங்களை இறைவனே மழித்து விட்டு, உள்ளே என் இதய ஆகாசத்தில் இன்ப நடனம் ஆடுகிறான். இது இறைவன் செயலே, எனது அன்று என்று பெருமகிழ்வோடு ரமணர் கூறுகிறார். அவனருளாலே அவன் தாள் வணங்கும் பேற்றை மாணிக்கவாசகப் பெருமானும் அழகுபடக் கூறுகிறார். இதற்கு இறைவனின் பேரருள் தேவை என்பது தெள்ளத் தெளிவு. தனக்கு வேண்டிய பக்தர்களை இறைவனே தடுத்தாட் கொள்கிறான். மருள்நீக்கியாருக்கு, வயிற்றினில் சூலை நோயை உண்டாக்கி அவரைத் துன்பப்படுத்தி இறுதியில் தன் பக்கம் ஏற்றுக் கொண்டு, அவரை நாவுக்கு அரசர் எனப் புகழ்படுத்திப் பார்த்தான். அதே இறைவன், சுந்தரனார் திருமண நேரத்தில், குழப்பம் விளைவித்து பொய் நூல்களைக் காட்டி அடிமைப் படுத்தி, பின்னர் சுந்தரர் வாயாலேயே பித்தா என்று பாடப் பெற்று பெருமகிழ்வு எய்தினான். சுந்தரரும் தம்பிரான் தோழர் ஆனார். ஆகையால் பரம்பொருளின் விருப்பம் என்பது உலகையெல்லாம் ஆளுகிறது. நிமித்தமாத்ரம் பவ சவ்ய சாசின் (நீ வெறும் கருவியாக ஆவாய்) என்று தேர்த்தட்டில் பார்த்தசாரதியும் திருவாய் மலர்கிறான்.

அப்படியென்றால் ஜீவாத்மாக்கள் ஒன்றுமே செய்ய இயலாத நிலையில் இறைவன் அருள் வரும் நாளை எதிர் நோக்கி இருக்க வேண்டியது தானா? அவர்கள் முயன்று செய்யக் கூடியது ஒன்றும் இல்லையா என்பன போன்ற வினாக்கள் நம் மனதில் எழும். இதற்கு ரமணர் இரண்டு வித உபாயங்களைச் சொல்கிறார்.

உபாயம் ஒன்று:

திருக்குறள் ஒரு அழகான மார்க்கத்தைப் பற்றிப் பேசுகிறது.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றினை
பற்றுக பற்று விடற்கு

இது ஒரு வித உன்னத மனோபாவம். பற்று நீக்கியவனான இறைவன் என்றால் அவன் நாம-ரூப-குண பேதமற்றவன். அவனிடம் வரம் கேட்டல், பிரார்த்தனை நிறைவேறும் படி கோருதல், போன்ற லௌகீகங்கள் செல்லாது. பற்று நீங்குதலே, பாமரனின் நோக்கம். அந்த ஒரு பாவத்தை மனதில் கல்பித்துக் கொண்டால் சில கேள்விகள் தாமாகவே உதிர்ந்து விடுகின்றன. அவனுக்கு பரமபதம் போன்ற ஸ்தான-வேட்கை நீங்கி பராபர சிந்தனை மேலோங்குகிறது. இந்நிலையில் இறைவன், அருள் செய்ய தானே இறங்கி வருகிறான். ரமணரின் அருள் வாக்கினைப் பார்ப்போம்.

பாவ பலத்தினால் பாவனாதீத சற்
பாவத்து இருத்தலே யுந்தீபற
பரபக்தி தத்துவ முந்தீபற

(உபதேசவுந்தியார் 9)

நான் கேவலம், இவ்வுலகில் இருக்கிறேன், எனக்கு வேட்கைகள் இல்லை என்ற பாவபலம், ரமணர் காட்டும் உத்தி, இதை அனன்னிய பாவம் என்று சொல்லுவார்கள். எல்லாமே ஈஸ்வரார்ப்பணம் என அறிதல் உயர்ந்த பரபக்தி தத்துவம். இது பகவானின் திருவாக்கு.

உபாயம் இரண்டு:

மேற்கண்ட பாடல் - பாவ பலத்தினால் பாவனாதீத சற்பாவத்து இருத்தல் - உயர்ந்த ஒரு மனோபாவம், என்றாலும் எளிதில் அனைவருக்கும் சாத்தியயமாக கூடியதில்லை. உலகின் பற்றுகளை அறுத்தல் என்பது ஆசாபாசங்களைத் துறந்த நிலை. சாதகர்களுக்கு, குணங்களால் ஏற்படும் அவஸ்தைகளைக் கடந்து சன்மார்க்கத்தில் திட விரதத்துடன் பயணித்தால் மட்டுமே கிட்டும் நிலை (பகவத் கீதையில் வருணிக்கப்பட்ட யோக பிரஷ்டன் என்னும் நிலை). இந்தப் பயணத்தின் போது நிலைகுலைந்து வழுக்கி விழும் அபாயம் உள்ளது. இதை விடச் சுலபமான வழி உளதா? என்று அறிய விழைகிறான் சாதகன். அதற்கு நமது சித்தாந்தங்களில் இறைவனே சரணம்! நமது குற்றம் குறைகளுடன் இறைவன் பாதங்களே கதி! என்று அவனையே சரணடைதல் என்னும் இரண்டாம் உபாயம் விதிக்கப்பட்டிருக்கிறது. இது சைவ, வைணவ சித்தாந்தங்களில் அதிகமாகப் பேசப்படும் வழிமுறை.

திருநாவுக்கரசர்,

கோமார்க்கே நாமென்றும் மீளா ஆளாய்
கொய்மலர் சேவடியிணையே குறுகினோமே!

என்று இப்பாவத்தை வருணிக்கிறார். குறுகுதல் என்பது உன்னத சரணாகதி தத்துவம். இதையே சுந்தர மூர்த்தி நாயனார், மற்றுப் பற்று எனக்கின்றி, நின் திருப்பாதமே மனம் பாவித்தேன் என்று உருகுகின்றார். இப்பாடலில் ஈற்றடியில் 'நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லுநா நமசிவாயவே!' என்று தன் நாவிற்குக் கட்டளை இடுகின்றார். இது முன் நாம் கண்ட அதர்வண வேதக் கருத்தை ஒத்து அமைந்துள்ளது நோக்குதற்கு உரியது.

உபாயம் ஒன்றில் இறைவனே எல்லாவற்றிற்கும் காரணம், மனிதனின் செயல் என்று எதுவும் இல்லை

*என்று கூறப்பட்டது. உபாயம் இரண்டில், ஜீவாத்மா சரணாகதி என்னும் செய்கையால் இறைவனை அடையலாம் என்கிறது. இரண்டில் எது சரியான தத்துவம்? இதற்கு திருமழிசை ஆழ்வார் நல்லதோர் விளக்கம் சொல்லுவார்:*

***நான் உன்னை அன்றி இலேன் கண்டாய்; நாரணனே!***
***நீ என்னை அன்றி இலை***

*இரண்டு உபாயங்களையும் ரசமாகக் கோர்த்து விட்டார் ஆழ்வார். இறைவன் இன்றி ஜீவன் இல்லை - இது புரிந்த வாதம். ஜீவாத்மாக்களை விட்டால் பரமனுக்கே வேறு கதி இல்லை என்பது நுண்ணிய (subtle) வாதம். இதை ரமணர் நூதன முறையில் சொல்லுகிறார்.*

***வரும்படி சொலிலை வந்து என்படி அள***
***வருந்திடு உன் தலைவிதி அருணாசலா!***

*இறைவனுக்கே தன்னை நடத்தும் பொறுப்பை பகவான் அர்ப்பணித்து விடுகிறார். இது பக்தி-வேதாந்தம் என்ற நிலையின் பாற்படும் வெவ்வேறு விதமாகத் தோன்றும் மார்க்கங்கள். இறுதியில் ஒன்றாக சங்கமிக்கின்றன என்பது பகவானின் வாதம். இந்த ரமண வேதாந்தம் எல்லாவித மக்களையும் அரவணைத்துச் செல்லும் திறன் உடையது. சாதகர்களின் பொறுப்பை எவ்வளவு அழகாக இறைவன்பால் திணித்து விடுகிறார் பகவான். இந்த நிலையே சாயுஜ்யம் (பரத்துடன் ஒன்று சேருதல்) என்ற நிலை. காஞ்சி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளிடம் இந்நிலையைப் பார்த்து இருக்கிறேன். இன்னும் இந்தப் புண்ணிய பூமியில் பல மகான்கள் இத்தகைய நிலைபெற்று வாழ்கின்றனர். அவர்களுக்கு நம்முடைய வணக்கங்கள்.*

*சித்தர் சித்தானந்தம்:*

*ஆனால் இக்கலிகாலத்தில் இத்தகைய மகான்களின் தொடர்பு எல்லோருக்கும் எளிதில் கிட்டுவதில்லை. இதைப் பட்டினத்தார் மிக எளிய தமிழில் போதிக்கிறார்.*

*அற்புதமாய் இந்த உடல் ஆவி அடங்கு முன்னே*
*சற்குருவைப் போற்றித் தவம் பெற்று வாழாமல்*
*உற்பத்தி செம்பொன் உடைமை பெருவாழ்வை நம்பிச்*
*சர்ப்பத்தின் வாயில் தவளைபோல் ஆனேனே!*

சின்ன வரிகளில் பெரிய உபதேசம். இந்த வாழ்வு அற்புதமானது. இது இருக்கும்போதே சற்குரு ஒருவரை அடையாமல் வீணே அழித்தால் என்ன ஆகும்? பாம்பு வாய் தவளை கதிதான். இந்தச் சிற்றின்ப சுகம் எப்படித்தான் நம்மை ஆட்டுவிக்கிறது!

அத்தகைய சற்குருவை அடைய முடியாதவர் என்ன செய்யலாம்? சரணாகதி என்பது பேசுவதற்கு எளிதாகத் தோன்றினாலும், சுலபத்தில் செயலாற்ற முடியாத நிலைப்பாடு. இறைவனே வந்து நம்மைத் தடுத்தாட் கொள்ள, நாம் அத்தனை தகுதி படைத்தவராகவும் தெரியவில்லையே, என்ன செய்யலாம். இதற்கும் ஒரு மூன்றாவது உபாயம் இருக்கிறது. நமக்குள்ளேயே ஒரு நீதிபதி நம்முடைய செயல்களைப் பார்த்துக்கொண்டே உடன் உறைகிறது. அதுவே நம் மனசாட்சி எனப்படுவது. இதையே தத்துவ விசாரணையில் இன்னும் மெருகு ஏற்றி அந்தக்கரணம் என்று சொல்லுவர். இந்தச் சக்தியைச் சற்று உற்று நோக்கினால், நம்முடைய செயல்களை நல்லது-கெட்டது என்று அது பாகுபடுத்தித் தடுத்து விடும். இக்கருத்தைச் சிவவாக்கியர் என்னும் சித்தர் நமக்காகச் சுருக்கி விளக்குகிறார்.

*நல்லதல்ல கெட்டதல்ல நடுவில் நிற்பது ஒன்றுதான்*
*நல்லதென்ற போதது நல்லதாகி நின்ற பின்*
*நல்லதல்ல கெட்ட தென்றால் கெட்டதாகும் ஆதலால்*
*நல்லதென்று நாடி நின்று நாமம் சொல்ல வேண்டுமே!*

பெரியதொரு வேதாந்த வேள்வியின் வாயிலில் இப்பாடல் நம்மை நிறுத்திவிடுகிறது. புரிந்தும் புரியாமலும் இத்தத்துவம் அமைந்திருந்தாலும், இதன் விளிம்புகள் ஓரளவு தெரிய ஆரம்பிக்கின்றன.

நல்லதென்று ஒன்றை உறுதியாக நாடியிருந்தால் பல விஷயங்கள் தாமாகவே தெளிவாகும். கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்ற தத்துவ விளக்கத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியதுதான்.

அப்படியென்றால், இந்த விளக்கங்கள், நூல்கள் எல்லாம் எதற்காக? - என்ற கேள்வி எழுகிறது. பரம்பொருளை முழுமையாகச் சொற்களால் விளக்க இயலாது, ஆனால் அவை அத்தியாவசியம் என்று ஸ்ரீ அரவிந்தர், 'சாவித்திரி' என்ற நூலில் கூறுகிறார்.

A symbol of what can never be symbolised, a langauage mispronounced, misspelt yet true.

இறைப்பணியை மேற்கண்ட ஒளியில் தொடருவதே சாலச் சிறந்தது. நூலறிவின் துணையால் நம் அனுபவங்களை நம்முடைய அறிவின் முதிர்ச்சியால் அலசும்போது பரம்பொருள் சித்தியாகிறான்.

*நீ என்னை நோக்கி ஒரு அடி எடுத்தால்*
*நான் உன்னை நோக்கி நூறு அடிகள் எடுக்கிறேன்!*

# இனிவரும் திருநாட்கள் – 2012

| | | | |
|---|---|---|---|
| அக்டோபர் | 16 | செவ்வாய் | நவராத்திரி தொடக்கம் |
| | 23 | செவ்வாய் | சரஸ்வதி பூஜை |
| | 24 | புதன் | விஜயதசமி |
| நவம்பர் | 13 | செவ்வாய் | தீபாவளி |
| | 18 | ஞாயிறு | கார்த்திகை தீப விழா தொடக்கம் |
| | 27 | செவ்வாய் | கார்த்திகை தீபம் |
| டிசம்பர் | 29 | சனி | ஸ்ரீ பகவானது 133-ஆவது ஜயந்தி |

# ரிபு கீதை

**தியாகராஜன்**

*அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபுகீதையின் 26-ஆவது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால் அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளார். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, ஸ்ரீபகவான் அவ்வப்போது அவை தொடர்பாக அருளியுள்ள விளக்கங்களோடு பக்தர்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.*

*எதனிடையின் மாயையுடைத் தோற்ற மில்லை*
*யெதனிடையின் மாயைசெயுஞ் செயலு மில்லை*
*யெதனிடையில் வித்தையிலை யவித்தை யில்லை*
*யெதனிடையி லீசனிலை சீவ ரில்லை*
*யெதனிடையிற் சத்துமிலை யசத்து மில்லை*
*யெதனிடையிற் சகத்தோற்ற மிறையு மில்லை*
*யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய் (26/9)*

*எதனிடையி லநேகவித வமர ரில்லை*
*யெதனிடையி லிவருடைய சேவை யில்லை*
*யெதனிடையிற் றிரிமூர்த்தி பேத மில்லை*
*யெதனிடையிற் றிரிமூர்த்தி தியான மில்லை*
*யெதனிடையிற் பரமசிவ வடிவு மில்லை*
*யெதனிடையிற் பரமசிவத் தியான மில்லை*
*யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்திருப்பாய் (26/10)*

*(பகவத் வசனாம்ருதம், 2/129 - பதிப்பு 2000) ஸ்ரீபக: ஸத்யம், வியாவஹாரிகம், பிராதிபாஸிகம், பாரமார்த்திக மென்று மூவகையாகக் கூறப்படும். வியாவஹாரிக திருஷ்டியில் ஜீவேசுவர ஜகத்துக்கள் ஒப்பப்படுகின்றன.*

ஜீவன் ஈசனை ஆராதித்து பந்தம் நீங்கி அமிருதனாகிறான். ஜீவேச்வரஜகத் தோற்றம் ஈச்வர சக்தியேயாம் மாயையால் நிகழ்வது. அத்தோற்றத்தால் அத்வைதத்திற்கு ஓர் ஹானியும் இல்லை. ஜீவேச்வரஜகத் தோற்றம் காண்பவனது காட்சியேயாம்; அவனை விட்டு அவற்றிற்கோர் இருப்பே யில்லை; நனவின் நாநா ஜீவத்தோற்றமும் கனவிற் காணும் அத்தோற்றத்தைப் போன்றதேயென்பது பிராதிபாஸிக வாதம். அத்வைதப் பிரஹ்மஸ்வரூபத்தைத் தவிர வேறெதுவுமேயில்லை; சிருஷ்டியுமில்லை ஸம்ஹாரமு மில்லை: பந்தமுமில்லை, மோக்ஷமு மில்லை; பக்தனு மில்லை, முமுக்ஷுவு மில்லை, முக்தனுமில்லை யென்பது பாரமார்த்திக ஸத்ய மொன்றையே ஒப்பும் அஜாத ஸித்தாந்தமென நவிலப் பெறும்.

(பகவத் வசனாம்ருதம், 2/82) கே: தூக்க நிலையை எதைக் கொண்டு உணர்கிறோம்?

ஸ்ரீபக: அதைத்தான் மாயாகரண மென்பர். ஜாக்ர ஸ்வப்நாதிகளில் இயங்குமதை அந்தக்கரணமென்று சொல்வர். நிலைமை வேற்றுமை பற்றி ஒன்றிற்கே வெவ்வேறு பெயர்கள். தூக்கத்தின் போது ஆனந்தாத்மா எனப்படுவதே விழிப்பு நிலைமையில் விஞ்ஞானாத்மா எனப்படுவது போல்.

கே: மாயாகரணமென்பதைச் சற்று விளக்கியருளல் வேண்டும்.

ஸ்ரீபக: தூங்குங்கால் எவ்வுபத்திரவமுமின்றி சுகமாய் இருந்தோமென்று சொல்வது ஓர் அநுபவத்தைப் பற்றியே யல்லவா? அதைத்தான் மாயாகரண மென்பது. நீரில் விழுந்ததை எடுக்க அதனுள் மூழ்குவோன் வெளியே வந்த பிறகுதான் பேசமுடியும். அவ்வாறே எந்நினைப்பு மின்றி சுகமாய்த் தூங்கினேனென்று விழித்ததும் நினைவுறுகின்றோம்.

(பகவத் வசனாம்ருதம், 2/146) கே: மாயாவாத மென்பது எது?

*ஸ்ரீபக: மனமே மாயை. அம்மனமாயையைக் கடந்துள்ளது ஆத்மஸ்வரூபம். மனவியக்கம் உள்ள மட்டும் அது மாயாமயமாம் துவைதமே. மனத்திற்கப்பாலுள்ளது ஸ்வஸ்வரூபம்.*

*கே: அதுதானே ஸச்சிதானந்தம் எனப்படுவது?*

*ஸ்ரீபக: இருப்பு, இன்மை (ஸத்அஸத்) என்னும் இருபான்மைகளையும் கடந்திலகும் அதே ஸத்தெனப்படும். அவ்வாறே (சித், அசித்) அறிவு, அறியாமையென்னும் இருபான்மைகளும் அற்றதே சித்தெனப்படும். அங்ஙனமே, சுகதுக்கத் தொடர்பிலதாம் சொரூபமே ஆனந்தமெனப்படும்.*

*(பகவத் வசனாம்ருதம், 2/291) கே: லாகூரில் பதினொரு வயதேயான ஒரு பெண் இருக்கிறாள். மூன்றே முறை கிருஷ்ணாவென்று கூப்பிட்ட மாத்திரத்தில் அவள் சமாதியில் ஆழ்ந்து பத்துமணி நேரம் அவ்வாறே இருக்கிறாள்.*

*ஸ்ரீபக: கிருஷ்ணனை நம்மினும் வேறாகப் பாவித்தாலன்றி, அவனை எப்படிக் கூப்பிட முடியும்? மேலும், ஸமாதி கூடுவது கலைவதிருக்குமட்டும் அஃதோர் லயமேயாகும். எப்போதும் நாம் சமாதியிலேயே இருக்கிறோம்; நமதியல்பே சமாதி; இதையுணரின் சமாதிகூடுதல் கலைதலென்னும் பேச்சிற்கிடமில்லை.*

*(பகவத் வசனாம்ருதம், 2/586) ஸ்ரீபக: ஜீவாத்மா. பரமாத்மா என்று பிரித்துக் காண்பது மனமே.*

*கே: அப்படியெனில், கடவுளும் நமது கற்பனைதானா?*

*ஸ்ரீபக: ஆம். நீ தூங்கும்போது கடவுளென்னும் நினைப்பு உனக்கிருந்ததா?*

*கே: தூக்கம் ஓர் ஜடமான நிலைமை; அதில் எப்படிக் கடவுளுணர்வு இருக்கக் கூடும்?*

ஸ்ரீபக: வாஸ்தவமானது எப்போதும் இருக்க வேண்டும். தூக்கத்திலும் விழிப்பிலும் நீ இருக்கிறாய். ஆனால் கடவுள் என்னும் எண்ணம் விழிப்பு நிலையிலேயே தோன்றுகிறது. நினைப்பவன் யார்?

கே: நானே நினைக்கிறேன்.

ஸ்ரீபக: நானென்று விவகரிப்பது எது? உடம்பா?

கே: உடம்புதான் பேசுகிறது.

ஸ்ரீபக: உடம்பு பேசக் கூடுமானால், அது தூக்கத்தின்போது பேச வேண்டும். ஆகவே இந்த நான் யார்?

கே: உடலுக்குள் இருக்கும் நானே பேசுகிறேன்.

ஸ்ரீபக: நீ உடலுக்குள் இருக்கிறாயா? வெளியிலா?

கே: உடலுக்குள்ளேதான் நான் இருக்கிறேன்.

ஸ்ரீபக: தூக்கத்தின்போது அவ்வாறு நீ இருப்பதாய் உணர்கிறாயா?

கே: தூக்கத்தின்போதும் உடலுக்குள்ளே தான் இருக்கிறேன்.

ஸ்ரீபக: தூக்கத்தின்போது உடலினுள் நான் இருக்கிறே னென்று உணர்கிறாயா?

கே: தூக்கம் ஓர் உணர்வற்ற ஜடநிலை. அறிவின் இயக்கம் அங்கே எப்படி இருக்கக்கூடும்?

ஸ்ரீபக: உண்மை யாதெனில், நீ உள்ளேயுமில்லை, வெளியிலுமில்லை. தூக்கம்தான் நமது இயல்புநிலை.

கே: அப்படியெனில், விழிப்பு நிலையைக் காட்டிலும் தூக்க நிலையே மேலானதா?

ஸ்ரீபக: மேல்நிலை, கீழ்நிலை ஒன்றுமில்லை. தூக்கம், விழிப்பு, கனவு என்னும் எல்லா நிலைமைகளிலும் நீ ஒரே விதமாகத்தான் இருக்கிறாய். தூக்க மென்பது துன்பக் கலப்பிலாததோர் இன்ப நிலை; குறை

*யுணர்ச்சியும் துக்கமும் விழிப்பு நிலையிலேயே உண்டாகிறது. இரண்டு நிலைமைகளிலும் நீயே இருந்த போதிலும், விழிப்பு நிலையில் தூக்கத்திலுள்ள இன்பம் மறைந்து, துக்கம் தோன்றுவதேன்? மனத்தின் எழுச்சியினாலேயே! மனமோ அகந்தையினின்று எழுவது. அகந்தை தூய உணர்வினின்று உதிக்கிறது. அனைத்தின் மூலமாம் தூய உணர்வே தானாய் நிலைத்திருப்பதே ஆனந்தம்.*

*(பகவத் வசனாம்ருதம், 2/66) ஸ்ரீபக: நமது தினசரி அனுபவத்தைப் பார்ப்போம். தூங்கும்போது துன்பம் எதுவுமில்லை. அத்துன்பமற்ற நிலை இப்போதும் தொடர்ந்திருக்கிறது. எப்போதும் உள்ளது அதுவே. அதுவே சிவமெனப்படும். சிவனுக்கு வடிவமொன்றுளதா என்று கேட்கு முன், நமக்கே வடிவமுண்டா என்று பார்ப்போம். தூக்கத்திலும் நாமேயிருக்கிறோம். அப்போது எவ்வடிவுடன் இருக்கிறோம்? வடிவொன்று மில்லாவிடினும் நாம் இல்லாது போகவில்லை. நாம் இப்போதும் அவ்வாறே இருக்கிறோம். (பொய்யாம் தேகாத்ம பாவமே அதை இப்போது மறைக்கிறது.) யதார்த்தத்தில் நமக்கே வடிவில்லை யெனுங்கால், சிவனுக்கு வடிவம் ஏது? வடிவற்றதோர் ஆனந்தமயமே சிவமெனப்படும்.*

*(பகவத் வசனாம்ருதம், 2/21) கே: ஏகான்ம ஞானத்தின் நேர்வழி இதுதானா? அல்லது தோன்றுவன யாவும் பகவத் ஸ்வரூபமே என்னும் பாவனை நானாரென்னும் அதீத விசாரணையைக் காட்டிலும் சிலருக்கு எளிதாகு மல்லவா?*

*ஸ்ரீபக: கடவுளை அனைத்திலுங் காண உன் மனத்தில் கடவுள் பாவனை முதலில் இருக்கவேண்டும். அவ்வாறு உன்னகத்தே கடவுளை பாவித்தலே தியானம். தியானம் அனுபவத்திற் கொண்டுபோய் விடும். கடவுளைத்*

*தியானித்தாலும் சரி, ஆன்மாவையே தியானித்தாலும் சரி, அதனால் அடையும் நிலையொன்றே. ஆயினும் உன்னை விட்டு நீ எங்கும் போக முடியாது. எல்லாவற்றிலும் கடவுளைக் காண விரும்பும் நீ முதலில் உன்னிடமே அவரைக் காண வேண்டாமா? எல்லாம் கடவுளெனின், அவ்வெல்லாம் என்பதில் நீயும் அடக்கமல்லவா? நீயே கடவுளுக்கன்னியமாயில்லை யெனின், எல்லாம் கடவுளே என்பதில் ஐயம் யாது? நீ அனுசரிப்பது எவ்வப்யாசமாயினும், பார்ப்பவன், அறிபவன் ஒருவன் இருக்க வேண்டும். அவன் யார்?*

*(பகவத் வசனாம்ருதம், 2/156-57) ஸ்ரீபக: எந்த தர்சனமாயினும் தரிசிப்பவனைப் பற்றியே அது நிகழ்கிறது. தரிசிப்பவனின்றித் தரிசனத்திற்கிடமே யில்லை. தரிசிப்பவன் எப்படியோ அப்படியேதான் அவனது தரிசனமும். தோன்றுவதெதுவும் மறைந்தே தீரும். தோற்றமும் மறைவுமற்று இடையறாது தானேயிலகுவதெதுவோ அதுவே சிவஸ்வரூபம். வெளியே சிவபெருமானது காட்சியெனப்படுவது கருவி கரணாதிகளின் துணைகொண்டு நிகழ்வதே. கருவிகரணாதிகள் காண்பானிடம் அடக்கம். காண்பானது தோற்றத்திற்கும் மறைவிற்கும் இடமாய், தனக்கோர் தோற்றமும் மறைவும் இலதாய், என்றென்றும் இலகும் தூயவுணர்வே சிவம். அதுவே நமது ஆத்மஸ்வரூபம். எத்திரிபுமற்று என்றென்றும் தானாயொளிர்ந்து கொண்டிருப்பது அனைவரின் நிஜஸ்வரூபமாம் அதுவே. அதுவாயிருத்தலே அதன் நிரந்தர தரிசனம். தன்னுள்ளாழ்ந்து சிவமே தானாயிலகவேண்டும். அதுவே சிவதரிசனம். இங்கே இப்போது இருப்பது அதுவே. எப்போதும் இருப்பததுவே. ஆதலின் சிவ தரிசனம் இனி எப்போதோ கிடைக்கப் போகிறதென்றெண்ணுவதேன்? சிவத்தையன்றி நமக்கோர் இருப்பில்லை. நாமே சிவம். இவ்வளவு எளிதாம் இது புரியவில்லையெனில் சிவபெருமானிடம் நம்மை முற்றிலும் ஒப்புவித்து*

*நிரந்தர சிவஸ்மரணையுடனிருக்க வேண்டும். அவர் எவ்வாறு தன்னை நமக்குணர்த்துவாரோ அப்படியே செய்யட்டும். இவ்வாறு அவ்வாறென்று அவரைக் கேட்க நமக்கோர் உரிமையுமில்லை; அவர் எவ்வாறு எதைச் செய்தாலும் சரியென்று இடைவிடாத சிவஸ்மரணை யொன்றையே கைப்பற்றி நின்றால், நமது ஜீவத்தன்மை முற்றிலும் ஒழிந்து, நாமும் சிவமும் பிரிவிலா ஒரே ஸ்வரூபமாய்த் திகழ்வோம். காண்பான் காட்சிமயமாம் உலகனைத்தும் சக்தியில் அடக்கம். சக்தி சிவத்தில் அடக்கம். எல்லாம் சிவமயமென்னும் உண்மையை யுணர்ந்து சாந்திமயமா யிருக்கவேண்டும். அகந்தை நானற்றவிடத்தே பாகுபாடேதுமற்ற பரிபூரணமா யொளிர்வதெதுவோ அதுவே சிவஸ்வரூபம். என்றுமெக்காலும் இடையறாதெங்கும் ஒளிர்வது அது வொன்றே.*

*(பகவத் வசனாம்ருதம், 2/160) ஸ்ரீபக: கடவுளென்று நீ சொல்வதும் உனதோர் கற்பனையே. உண்மையில், சுத்த சைதன்யமே நீ. அதற்கயலாய் எக் கடவுளும் இல்லை. பிற யாவும் அதனிடம் தோன்றி மறையும் மனோமயமாம் கற்பனைகளே. நானென்னும் எண்ணம் எழுந்த பின்னரே பிற நினைவுகள் யாவும் எழுவன. அஃதுதிக்குமிடத்தை நாடினால் அகந்தை எழாது ஒழியும். அவ்விடத்தே, நானென்பதன் உண்மையாம் ஆத்மஸ்ரூபம் எல்லாம் தானாய், தனக்கயல் யாதுமிலதாய் ஒளிரும். அதுவே, தானாய் நிற்றலே, ஸஹஜஸ்திதி யெனப்படும்.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் – 2012

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *நவம்பர்* | *28* | *புதன்* | *இரவு 6.28* | *29* | *வியாழன்* | *இரவு 8.32* |
| *டிசம்பர்* | *28* | *வெள்ளி* | *மதியம் 2.14* | *29* | *சனி* | *மதியம் 4.14* |

# உதித்த இடத்தில் ஒடுங்கு [ஸ்ரீ ரமண சூத்ரம்]

**பிர. கிரிதர ஜெகதீஷ்**

*மனதில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று விருத்தி அம்சம். மற்றொன்று சைதன்ய அம்சம். விருத்தி என்றால் எண்ணம். சைதன்யம் என்றால் உணர்வு.*

*எண்ணம், உணர்வு இந்த இரண்டின் கலவையாக மனம் இருந்து கொண்டிருக்கிறது.*

*அறிவு அம்சமாகிய உணர்வு அம்சமே விருத்தி அம்சத்தைப் பிரகாசப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதாவது எண்ணங்கள் அறிவு சொரூபமாகிய உணர்வு அம்சத்தால்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.*

*இன்னும் சொல்லப்போனால் உணர்வு அம்சமே எண்ணங்களாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.*

*செடி என்பது விதையின் வெளிப்பாடுதானே!*

*கடல் அலைகள் போன்று எண்ணங்கள் செயல்படுகின்றன. கடலின் ஆழமான அம்சம் போன்று 'உணர்வு' இருந்து கொண்டிருக்கிறது.*

*'உணர்வு' அம்சத்தை பிரம்மம் என்றும், 'விருத்தி' அம்சத்தை மாயை என்றும் சாஸ்திரம் கூறுகிறது.*

*க்ஷேத்ரக்ஞம் சாபி மாம் வித்[3]தி[4] ஸர்வக்ஷேத்ரேஷு பா[4]ரத*

*- பகவத் கீதை, 13-3*

*அனைத்துச் சரீரங்களிலும் அறிபவனாக நான் இருக்கிறேன் என்று கீதை கூறுகிறது.*

விருத்தி அம்சம் உலகமாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது. உணர்வு அம்சம் 'நான்' 'நான்' என்று விளங்கிக் கொண்டு, உலகத்தை விளக்கிக் கொண்டிருக்கிறது.

"தன்னைக் கண்டே தான் மயங்கும்

தடுமாற்றம்தான் ஜகமாயை"

என்று பகவான் ரமண மகரிஷி கூறுவதை இங்குக் கவனிக்க வேண்டும்.

நான் என்ற உணர்வு அம்சத்தை விட்டுவிட்டு விருத்தி அம்சமே 'சத்யம்' என்ற புத்தியை உடையவன் துன்பத்திற்கு ஆளாகிறான்.

'நான்'னின் பிரதிபலிப்பே உலகமாகத் தோன்றிக் கொண்டிருக்க, ஜீவனோ நான்-ஐ திருப்திப்படுத்த உலகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதுதான் விந்தையிலும் விந்தை!

இதற்குத் தீர்வு என்ன?

ஸ்ரீ ரமண சூத்திரத்தைப் பார்ப்போம்:

"உதித்த இடத்தில் ஒடுங்கியிரு"

ஸ்ரீபகவான் ரமணரின் உபதேச உந்தியார் என்ற அற்புதமான நூலில் இவ்வரியைக் காண்போம்.

நான் என்று எங்கு எழுகிறதோ, அந்த நானை அந்த இடத்திலேயே மீண்டும் ஒடுக்குவதுதான் பக்தி, ஞானம், யோகம், கர்மம் என்ற விதத்தில் அந்தச் செய்யுள் அமைந்துள்ளது.

ஒடுக்குதல் என்றால் எப்படி-

அதற்குரிய குறிப்பை பகவானே நமக்குத் தருகிறார்.

"லயித்தது மீளும், நசித்தது மீளாது."

நான் கரைந்து போகும் நிலையே ஆனந்தநிலை.

இந்த நான் எந்த அளவிற்கு மறைந்து போகிறதோ அந்த அளவிற்கு ஜீவன் ஆனந்தத்தை அனுபவிக்கின்றான்.

போகப் பொருட்கள், இதமான சூழ்நிலை, அன்பான மனிதர்கள், புகழ் இவைகள் ஒரு மனிதனின் நான்-ஐ கரைந்து போகச் செய்கின்றன. அதாவது, மகிழ்ச்சி தருவதாக இவன் நினைக்கும் இத்தூண்டுதல்கள் 'நான்' என்ற ஆத்மாவின், ஆனந்த வெளிப்பாடே. அப்போது ஜீவனாகிய 'நான்' கரைந்து ஆத்மாவாகிய 'நான்' ஸ்புரிக்கிறது. ஆகவேதான் மனிதர்கள் மீண்டும் மீண்டும் இவைகளைத் தேடி ஓடுகிறார்கள்.

ஆனால் இவைகளால் ஒரு கணப்பொழுது மட்டுமே நான்-ஐ மறைக்க முடிகிறது. ஆழ்ந்த உறக்கம் சற்று நீடித்த நிலையில் இருந்து ஆனந்தத்தைத் தந்தாலும் அதுவும் அஞ்ஞான வசத்தில் இருப்பதால் விழித்த பிறகுதான் நாம் ஆனந்தமாக இருந்தோம் என்ற விபரம் தெரிகிறது.

ஸமாதி போன்ற யோக அவஸ்தைகளும் கர்மவினை எழும்பொழுது கலைந்து போகின்றன.

பகவான் ரமணரே கூறுகிறார்:

நவாப் ராஜ்யம் நடந்து கொண்டிருக்கும் சமயம் ஒரு யோகி தியான வேளையில் தண்ணீர் கொண்டு வரும்படி தன் சிஷ்யர்களுக்குக் கட்டளையிடுகிறார். தண்ணீர் வருவதற்குள் ஸமாதியில் ஆழ்ந்துவிடுகிறார்.

ஆண்டுகள் பல கடந்தன. நவாப் ராஜ்யம் சென்று, ஆங்கிலேயர் ராஜ்யமும் சென்று, இந்தியா சுதந்தரம் அடைந்து விட்டது.

ஸமாதியிலிருந்து கண் விழித்த யோகி தண்ணீர் எங்கே என்று கேட்டாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

ஸமாதி அனுபவத்தில் அந்த யோகி ஆனந்தமாக உடல், உலக அனுபவங்களை விட்டொழித்து இருந்தார்.

*ஆனால் கர்மவினை மீண்டும் அவரை வெளியே கொண்டு வந்தது. பழைய ஸம்சாரி நான் அப்படியே மீண்டு வந்தது.*

*இதைத்தான் 'லயித்தது மீளும்' என்று பகவான் ரமணர் கூறுகிறார்.*

*விழிப்பு நிலையில் [ஜாக்ரத் அவஸ்தை] பிரச்னை இருக்கும்பொழுது அதைத் தீர்வு செய்வதற்கு ஸமாதி அவஸ்தையைத் தேடுவது சரியானது அல்ல என்பது மஹரிஷியின் உபதேசம்.*

*ஒருவர் எதையோ தேடிக் கொண்டிருந்தார். என்ன தேடுகிறீர்கள் என்று அன்பர் ஒருவர் அக்கறையுடன் கேட்டார். சாவியைத் தொலைத்து விட்டேன். அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன் என்றார் தேடுபவர்.*

*சாவியை எங்கே தொலைத்தீர்கள்? என்றார் அன்பர். 'எனது அறையில் தொலைத்திருக்க வேண்டும்' என்றார் இவர்.*

*பிறகு இங்கே தேடிக் கொண்டிருக்கிறீர்களே? என்றார் அன்பர். சாவியைத் தவறவிட்ட புத்திசாலி கூறினார்:*

*"ஐயா! வெளிச்சம் எங்கு இருக்கிறதோ அங்குதானே தேட முடியும். சாவியை அங்குத் தவற விட்டிருந்தாலும், வெளிச்சம் இங்குதான் இருக்கிறது. ஆகவே இங்குதானே தேட வேண்டும்!"*

*நான்-ஐ மூழ்கடிக்க சமாதியைத் தேடிச் செல்வது என்பது இதைப் போன்றதே.*

*வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது என்பது இந்த 'நான்' விஷயத்தில் நன்கு பொருந்தி வருகிறது.*

*நான் யார் என்று தன்னை நாடுவதே அகங்கார வேதாளம் மீண்டும் நம் தலை என்ற முருங்கை மரத்தில் ஏறுவதை ஒழிக்கும்.*

நான் என்ற ஒன்று எழுந்தவுடன் பந்தம், மோக்ஷம் குறித்த பிரச்சினையும், அதற்குரிய சாதனத்தைக் குறித்த சர்ச்சையும் எழுகின்றன.

'நான்' எழும்பொழுதே அதை விரிவடைய விடாமல் மீண்டும் எழும் இடத்திற்கே திருப்பி உள் ஒடுங்குவதே உத்தம யோகம் என்கிறார் பகவான்.

தங்கத்தால் செய்யப்பட்ட ஆபரணங்களை வளையல், மோதிரம், நெக்லஸ் என்று விதவிதமான பெயர்களில் தனித்தனியாக இருப்பு, அந்தஸ்து கொடுத்து அழைக்கிறோம்.

உண்மையில் தங்கத்திற்கு அந்நியமாக வளையல், மோதிரம், நெக்லஸ் என்று தனித்தனியாக வஸ்து, பொருள் அங்கு இல்லை.

தங்கம் மட்டுமே இருக்கிறது. தங்கமே ஆபரணங்களாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது. ஆபரணங்களை தங்கத்திற்குள் ஒடுக்கி விடுவதே மோக்ஷம். ஆபரணங்களை மீண்டும் உருக்கினால் அவைகள் தங்களுடைய தனித்துவத்தை இழந்து மீண்டும் தங்கமாக மட்டும் விளங்கும். இது ஒரு முறை.

ஆபரணங்களைக் கையாண்டு கொண்டிருக்கும் பொழுதே அதனுடைய ஆதார வஸ்துவை மட்டும் கவனத்தில் வைத்து, ஆபரணங்களின் தனித்துவத்திற்கு கவனம் அளிக்காமல் இருப்பது.

இதுதான் ஆபரணங்களைத் தங்கத்திற்குள் ஒடுக்கும் உத்தமமான முறை ஆகும்.

பகவான் ரமணர் தன்முக நாட்டம் என்று இதைத்தான் கூறுகிறார்.

ஜீவ, ஈசுவர, ஜகத் அனுபவங்களை முற்றிலும் இல்லாது ஒழிப்பது என்பது சாத்தியமற்றது. அது மோக்ஷம் அல்ல. இம்மூன்றும் இல்லாத உறக்கத்தை

*நாம் பலமுறை அனுபவித்து விட்டோம். இருப்பினும் ஸம்ஸாரித்வம், ஜென்ம, மரண, பயம் இருந்துகொண்டு தான் இருக்கிறது.*

*ஜீவ, ஈசுவர, ஜகத் பேதங்களைக் கையாண்டு கொண்டிருக்கும் பொழுதே அவைகளுக்குள் விழுந்து விடாமல் 'நான்' என்ற தன்னுணர்வை விடாமல் பிடித்திருத்தல் வேண்டும்.*

*ஜீவ, ஈசுவர, ஜகத் அனுபவங்கள் முற்றிலும் பொய் என்ற அறிவில் உறுதிப்பாட்டுடன் இருத்தல்.*

*அனைத்தையும் அறிந்து கொண்டிருக்கிற, அனுபவித்துக் கொண்டிருக்கிற 'இருப்புணர்வு' வடிவில் இலங்குகிற தூய உணர்வை விடாது பற்றிக் கொள்வதே மோக்ஷம்.*

*பகவான் ரமணர் கூறுவதைக் கேட்போம்:*

*"எத்தனை எண்ணங்கள் எழுந்தாலென்ன! அவைகள் எழும்பொழுதே, இவைகள் அனைத்தும் யாருக்கு என்று கேள்வி எழுப்பினால் 'எனக்கு' என்று பதில் வரும்.*

*'நான்' யார் என்று நோக்கினால் சப்தங்களற்ற தூய உணர்வே எஞ்சியிருக்கும். அங்கேயே தங்கிவிடு. ஜீவ, ஈசுவர, ஜகத் பற்றிய சர்ச்சைகள் அங்கு இருக்காது. ஏனெனில் இந்தப் பேரங்கள் அனைத்தும் அகங்காரத்தின் தோற்றங்களே.*

*நான் என்ற முதல் எண்ணத்தைப் பற்றும்பொழுது மற்ற எண்ணங்கள் ஒழிகின்றன. பிறகு 'நான்' என்ற எண்ணமும் தனக்கு ஒரு பற்று இல்லாததால் மறைந்து ஒழியும். சைதன்யம் மட்டுமே எஞ்சி நிற்கும்.*

*'உதித்த இடத்தில் ஒடுங்கியிருத்தல்' என்ற சூத்திரம் போன்ற இந்த வாக்கியத்தில் பகவான் ரமணர் அகங்கார நாசத்தைச் செய்வதற்குரிய மார்க்கத்தை மிக அழகாக நமக்கு உணர்த்தியுள்ளார்.*

# மோன சன்னிதியின் மகிமை

**வி. நிரஞ்சன்**

*1898-இல் பகவான் வீட்டை விட்டு அண்ணாமலை ஏகி ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டிருந்தது. அப்பொழுதுதான் மதுரையில் இருந்த அவரது உறவினர்களுக்கு முதல் முறையாக அவர் எங்கே இருக்கின்றார் என்பது தெரியவருகின்றது. அவரது சிறிய தந்தை நெல்லையப்ப ஐயரும் உறவினராகிய நாராயண ஐயரும் திருவண்ணாமலைக்கு வருகின்றனர். அச் சமயம் பகவான் வெங்கடரமண நாயக்கருக்குச் சொந்தமான மாங்காய்த்தோப்பில் மௌனமாய் இருந்து வருகின்றார். நாயக்கர் வந்தவர்களை பகவானைப் பார்க்க அனுமதிக்கவில்லை. அவர் மௌனத்தில் இருக்கின்றார் என்று கூறித் தடுத்து விடுகின்றார். எவ்வளவு உறவைச் சொல்லி வற்புறுத்தியும் அவர் உள்ளே அனுமதிக்கவே இல்லை. பின்னர் நெல்லையப்பர் ஒரு காகிதத் துண்டில் தனது பெயரை எழுதிக் கொடுக்கின்றார். அதன் பிறகு உள்ளே நுழைந்தவர் பகவான் இருந்த கோலத்தைக் கண்டு மனம் நெகிழ்ந்தார். உடலைப் பற்றிய பராமரிப்பு பற்றிச் சற்றும் பகவானின் கவனத்தில் இல்லாத சமயம். தலை முடி நிறைய வளர்ந்து அழுக்கு ஏறியிருந்தது. உடல் முழுதும் அழுக்கு ஏறியிருந்தது. மனம் பதைத்த நெல்லையப்பர் பலவாறு பகவானிடம் எடுத்துச் சொல்லி அவரை அழைத்துப் பார்த்தனர். அவரது துறவிற்குப் பாதகமில்லாமல் அவரைக் கவனித்துக் கொள்வதாகவும் உறுதி அளித்தனர். ஆனால் பகவானோ சிலை போல்*

அமர்ந்திருந்தனர். தங்களுடைய வற்புறுத்தல் பயனளிக்கவில்லை என்று நெல்லையப்பர் வருந்தினார். அப்பொழுது அவரது உறவினராய் இருந்த நாராயண சுவாமி ஐயர் வன்முறையாக பகவானைத் தூக்கிக்கொண்டு செல்வதென்று உறுதி கொண்டு பகவானை நெருங்குகின்றார். நெருங்குகின்ற பொழுது அவரை அணுகவிடாமல் அக்கினிச் சூடு அவர் உடலைத் தாக்குவதை உணர்ந்தார். அப் பாதுகாப்பு வளையத்தை ஊடுருவிச் செல்ல முடியாது திகைத்து அவரது முயற்சியைக் கைவிட்டார். இந் நிகழ்ச்சியை கிருஷ்ண பிக்ஷு தனது "ரமண லீலா" என்னும் நூலில் தெரிவித்திருக்கின்றார். பகவானின் மோன சன்னிதியின் தன்மை நம் கற்பனைக்கு அப்பாற்பட்டு எண்ணிலாத வியத்தகு கலைகளைக் கொண்டது என்பது தெளிவன்றோ?

கிட்டி ஆஸ்போர்ன் சிறுமியாக இருந்த சமயம் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றினை நினைவுகூர்கின்றார். வட இந்தியாவைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் அவரது அன்னையைக் காண வருகின்றார். இளம் வயதினராக இருந்த அந்தப் பெண்மணியின் முகத்தில் ஒருவிதக் கடுமை நிலவியது. பொறுமையும் சாந்தமும் அற்றவராயும் வலியும் வேதனையும் மிகுந்தவராயும் இருந்த அப் பெண்மணிக்கு அருகில் இருக்கவே கிட்டிக்கு அச்சமாய் இருந்தது. அவ் வட இந்தியப் பெண்மணியிடம் சற்றே பேசிய அவரது அன்னை கிட்டியை அழைத்து அவரை பகவானிடம் கூட்டிச் செல்லுமாறு சொன்னார். கிட்டியும் வேறு வழி இல்லாது அவரை பகவானின் சன்னிதிக்குக் கூட்டிச் சென்று விட்டுவிட்டு விளையாடச் சென்றுவிட்டார். மீண்டும் அந்தப் பெண்மணி அவரது அன்னையைச் சந்தித்து சற்று நேரம் இருந்துவிட்டுச் சென்றார். அப்பொழுது அந்தப் பெண்மணியின் முகத்தில் பெருத்த மாறுதல் ஏற்பட்டு இருந்ததைக் கிட்டி கண்டு அதிசயித்தார். பின்னர்தான்

அவரது அன்னையிடம் இருந்து அப்பெண்மணியின் கதையினை அறிந்தார்.

செல்வம் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் அப் பெண்மணி. அவர் காதலித்த ஒருவரையே அவர் மணந்துகொண்டார். ஆனால் அதற்கு அவரது வீட்டினர் காட்டிய எதிர்ப்புகளை எல்லாம் எதிர்கொண்டு இறுதியில் அவர்களையும் இணங்கவைத்த பின்னரே அவரது திருமணம் நிகழ்ந்தது. அவரது விருப்பம் நிறைவேறி அவர் தனது கணவருடன் மகிழ்வோடு இருந்து கொண்டிருந்த சமயம். கடலில் குளித்துக் கொண்டிருந்த அவரது கணவர் கரையில் உட்கார்ந்து கொண்டிருந்த அவரது கண்ணெதிரேயே சுறா மீன் ஒன்றினால் தாக்கப்பட்டு அதனோடு எவ்வளவு போராடியும் காப்பாற்றப்படமுடியாது அதற்கு இரையாகிவிடுகின்றார். தன் எதிரே நிகழ்ந்த இந்நிகழ்ச்சி அப்பெண்மணியைத் திகைப்பிலும் ஆற்றொணாத் துயரத்திலும் ஆழ்த்தியது. அதிர்ந்து போன அவர் கருணை மிகுந்த இறைவன் எவ்வாறு தனது வாழ்வில் இவ்வளவு கோரமான விபத்தை நிகழ்த்தவேண்டும், தான் செய்த பாபம் தான் என்ன, இறைவனின் கருணை ஏன் அவருக்கு மறுக்கப்பட்டது என்பது குறித்து பெருஞ்சீற்றம் அடைந்தார். நிம்மதி இழந்தார்; வாழ்வையும் மத நம்பிக்கையையும் வெறுத்தார். நாட்டில் இருந்த பல சமய ஆசான்களைச் சந்தித்து தனது வாழ்வில் ஏற்பட்ட சீர்குலைவிற்கான விளக்கங்களைக் கேட்டார். யார் ஒருவருடைய விளக்கமும் அவருக்கு ஆறுதலோ தெளிவோ அளிக்கவில்லை. சீற்றமும் வெறுப்பும் அடங்காத சூழ்நிலையிலேயே அன்றைய நாள் அவர் பகவானை அடைந்திருக்கின்றார். சிறுமியான கிட்டி அவரை அணுகமுடியாது தடுத்தது அப் பெண்மணியிடம் நிரம்பியிருந்த எதிர் மறை உணர்வுகளே.

ஆனால் பகவானின் சன்னிதியில் நிகழ்ந்தது ஒரு பேரதிசயமே. என்ன நிகழ்ந்தது? பகவானிடம் அவர் தனது சவால்களை எறிந்தனரா? இல்லை. பகவானின் சன்னிதியில் சென்று அவரது எதிரே அமர்கின்றார். ஒன்றுமே பேசவில்லை. மோன சன்னிதியாய் விளங்கும் பகவானின் கருணை ததும்பும் கண்கள் அப் பெண்மணியை நோக்கி நிலைக்கின்றன. அவ்வளவு தான். சொல்லும் மனமும் தம்பித்து, வாக்கு மனம் கடந்த அமைதி அப்பெண்மணியின் உள்ளே நிலவியது. கேள்விக் கணைகள் தொடுக்கப் படவில்லை. வார்த்தைகளால் பதிலும் கொடுக்கப் படவில்லை. கேள்விகளுக்கும் பதிலுக்கும் அப்பாற்பட்ட பூரண சாந்த வெளியில் பிறக்கும் தெளிவு கேள்விகளுக்கும் பதிலுக்கும் இடமே இல்லாது செய்துவிடுகின்றது. வெறுப்பும் சீற்றமும் மறைந்து மென்மையும் சாந்தமும் நிறைந்தவராய் அப்பெண்மணி பகவானின் சன்னிதியை விட்டு அகல்கின்றார். ஞானியின் மோன சன்னிதியின் ஒப்புயர்வற்ற மேன்மைக்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

சூரியபிரகாஷ் என்பவர் இன்னொரு நிகழ்ச்சியை விவரிக்கின்றார். அவர் வட இந்தியாவின் சிந்து நிலப்பரப்பைச் சார்ந்தவர். பகவான் ரமணரைப் பற்றி அறிந்ததிலிருந்து அவர் பகவானைத் தரிசிக்க ஆவலாய் இருந்தார். ஒரு முறை அவர் பெங்களூருக்கு வேலை காரணமாகச் செல்ல வேண்டியிருந்தது. அவரோடு இருவர் இணைந்து கொள்கின்றனர். பெங்களூரில் தங்கி இருந்த பொழுது சூரியபிரகாஷ் பகவானைத் தரிசிக்க எண்ணலானார். அவருள்ளே மிகுந்த ஆர்வம் கிளர்ந்தது. ஆனால் அவருடன் வந்தவர்களோ அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். அது காடுகள் நிறைந்த பகுதி, வசதி கிடைக்காது என்று எல்லாம் சொல்லித் தடுத்தனர். அவரும் தன் ஆர்வத்தை மட்டுப் படுத்திக் கொண்டார். ஆனல் சில நாட்கள் கழிந்து மீண்டும் அவரது உள்ளத்தில் பகவானைத் தரிசிக்க ஆவல் மிகுந்தது. அப்பொழுது

*அவருடன் வந்தவர்கள் இரண்டு நாட்கள் மட்டுமே அங்கே தங்குவது என்று உறுதி செய்து கொண்டு அண்ணாமலையை அடைந்து பகவானைத் தரிசித்தனர். இரண்டு நாட்கள் தங்க நினைத்தவர்கள் பத்து நாட்கள் தங்கிவிட்டனர். பகவானின் சன்னிதியிலிருந்து பிரிய அவர்கள் மனது இடம் கொடுக்கவில்லை. இருந்தும் ஆசிரமத்தின் விதிமுறைப்படி பத்து நாட்களுக்கு மேல் அவர்கள் தங்குவதற்கு வாய்ப்பு இல்லை. அதனாலேயே அவர்கள் பிரிய நேர்ந்தது.*

*அவர்களோடு வந்தவரில் ஒருவர் வயதில் மூத்த அவருடைய உறவினர் ஆவார். செல்வந்தரான அவர் வாழ்வில் அனைத்து போகங்களையும் திகட்டாது துய்ப்பவர். பகவானைத் தரிசித்து மீளும்போது அப் பெரியவர் தன்னைவிட வயதில் இளையவரான சூரிய பிரகாஷின் காலைத்தொட்டு வணங்கி, “அப்பா, இறைவனையே எனக்குக் காட்டிவிட்டனை. உனக்கு நான் எப்படி நன்றி செலுத்துவது என்றே தெரியவில்லை. என் வாழ்வில் எனக்கு நிகழ்ந்த ஒரு பேரனுபவம் இது,” என்று கூறி மனம் உருகிப்போனார். அவரது வாழ்வில் அப்படி ஒரு மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அண்ணாமலை செல்லவேண்டாமென்று கூறிய ஒருவர் சூரியப் பிரகாஷின் தீவிர ஆர்வத்தால் பகவான் சன்னிதிக்கு ஈர்க்கப்பட்டு அருளுக்குப் பாத்திரமாகி அடிப்படை மனமாற்றம் ஏற்பட்டு அகமுகமாகும் நல் விளைவு நிகழ்ந்தது. சிறிது காலம் கழிந்து அவர் வாழ்க்கை முடிந்துவிட்டது. யாருக்கு எப்போது எவ்வாறு குருவருள் கிட்டும் என்பது வியப்பாய் இருக்கிறது என்று சூரியபிரகாஷ் கூறுகின்றார்.*

*சாது ஓம் சுவாமி ஒரு நிகழ்ச்சியை விவரிக்கின்றார். வேலூரில் அரசு பதவியில் ஓர் இளைஞன் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய மனைவி திருவண்ணாமலையைச் சார்ந்தவர். இளம் வயதிலேயே*

பெற்றோர்களை இழந்து விட்ட அந்த இளைஞன் தனது மனைவியின்பால் பேரன்பு வைத்திருந்தான். அந்த அளவிற்கு மனைவி அவன் மீது காட்டும் அன்பிற்கு அடிமையாய் இருந்தான். ஒரு சமயம் அவனது மனைவி அவன் வேலைக்குச் சென்றிருந்த சமயம் திருவண்ணாமலை செல்ல நேர்ந்தது. மதியம் வீட்டிற்கு வந்தவன் மனைவி பிறந்த ஊர் சென்றிருக்கின்றாள் என்று அறிந்து அவளை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் உடனே திருவண்ணாமலைக்குப் பயணமானான். மனைவியின் வீட்டிற்குச் சென்றவன் அவள் ரமண ஆசிரமத்திற்குச் சென்று இருக்கின்றாள் எனக் கேள்விப்பட்ட உடன் அவளுக்காக அவளது வீட்டிலேயே காத்து இராமல் நேரே ஆசிரமத்திற்கு விரைந்தனன். உடையைக்கூட மாற்றிக்கொள்ளவில்லை. மேலை நாட்டு உடையில் காலணியோடு கூடி அவன் ஆசிரமத்திற்குள்ளே நுழைந்தான். பகவானைப் பற்றி ஏதும் அறிந்திராத நிலையில் ஆசிரமத்திற்குள்ளே காலணிகளோடு செல்வதைத் தவிர்க்கவும் தெரியாமல் மனைவியைத் தேடி வந்துவிட்டான். எங்கே செல்வது என்று யோசித்தவாறு ஓர் ஒற்றையடிப் பாதையில் நின்றுகொண்டிருந்தவன் சிகரெட் ஒன்றினை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். அச்சமயம் அவனது பின்னால் வந்த யாரோ அவன் மேல் கை வைத்ததை உணர்ந்து சட்டென்று திரும்பிப் பார்க்கின்றான். புன்முறுவலோடு அவன் மீது அருட்கண்ணோக்கம் செய்து கொண்டிருந்தனர் பகவான். சற்றே நிகழ்ந்த நிகழ்ச்சி. ஆனால் அருட் கண்ணோக்கால் பாலிக்கப்பட்ட அவனோ அவ்விடத்தை விட்டு அகன்று நேராக வேலூருக்கே சென்றுவிட்டான். தன் மனைவியைத் தேடியதைக் கைவிட்டுவிட்டு அவளுடைய வீட்டினரிடம் ஏதும் சொல்லிக் கொள்ளாமல் வேலூருக்குச் சென்றவன் வேலையை விட்டுவிடுவதாகக் கடிதம் எழுதிக்கொடுத்து விட்டு அவ்விடத்தை விட்டே சென்றுவிட்டான். வீடு

*திரும்பிய மனைவி நிகழ்ந்ததை அறிகின்றாள். பகவானைச் சந்தித்ததன் விளைவாக நிகழ்ந்த நிகழ்ச்சி என்பதனை உணர்ந்து மனம் ஆறுகின்றனள். ஒரே ஒரு முறை நிகழ்ந்த திரு அருட் கண்ணோக்காலேயே ஆன்ம ஞானானுபூதி பெற்று ஆன்மாவில் நிலைத்திருக்கும் திடவைராக்கிய பக்குவம் அவனுக்கு இருந்திருக்க வேண்டும். அவன் எதிர்பாராத நிகழ்ச்சி; குருவின் புன்முறுவலோ அவர் எல்லாம் அறிந்தமையைக் காட்டுகின்றது.*

*சாந்தம்மாள் நினைவு கூறும் நிகழ்ச்சி நெடிய நேரம் பகவான் அருள் செய்தமையை விளக்குகின்றது. ஒரு முறை மேலை நாட்டினர் ஒருவர் பகவானை நெருங்கி ஒரு காகிதத் துண்டில் ஏதோ எழுதி அளிக்கின்றார். அதில் என்ன எழுதப் பட்டிருந்தது என்று தெரியவில்லை. அதைப் படித்த பகவான் ஒன்றும் பேசவில்லை. அம் மேலை நாட்டவரையே பார்த்த வண்ணம் சமாதியில் நிலைத்துவிடுகின்றார். மேலை நாட்டினரும் பகவானைப் பார்த்தவாறே இருந்தார். சற்று நேரத்தில் பகவானும் கண்கள் மூடியவாறு இருக்க அவரும் கண்கள் மூடியவாறு அமர்ந்திருந்தார். பகவானுடைய திருமுகம் பெரும் பொலிவுடன் ஒளிர்ந்துகொண்டிருந்தது. மதிய உணவிற்கு நேரம் ஆயிற்று. ஆனால் பகவான் சமாதியில் ஆழ்ந்து இருந்தனர். உறக்கப் பேசி பகவானைச் சமாதியில் இருந்து மீட்கப் பண்ணிய முயற்சி தோல்வி அடைந்தது. பாத்திரங்களை நகர்த்தும் பொழுது ஏற்படும் சத்தத்தாலும் பகவானது ஆழ் நிலைப்பை அசைக்க முடியாது போயிற்று. விருந்தினர்கள் உணவுக் கூடத்தில் காத்திருக்க, பரிமாறப்பட்ட உணவு ஆறிக் குளிர்ந்து இருந்தது. ஆனால் பகவானுடைய கவனத்தை வெளியே ஈர்க்க முடியாது போயிற்று. பன்னிரண்டு மணி அளவில் பகவானும் அந்த மேலை நாட்டினரும் வெளி உலகிற்கு மீண்டனர். பகவானோ அமைதியாக உணவுக் கூடத்திற்குச் சென்றார். அவருடைய கண்கள் ஒளிமிகுந்து*

விளங்கிக் கொண்டிருந்தன. அம் மேலை நாட்டினர் ஆசிரமத்தை விட்டு அகன்றார். நிகழ்ச்சி இன்னது என்பதை அவர்கள் இருவர் மட்டுமே அறிவர்.

இது போன்ற ஒரு நிகழ்ச்சியைத் தானே நேரில் கண்டு பகவானின் மோனத்தின் வல்லமையை வியந்து போற்றுகின்றார் எதெல்மெர்ஸ்டன் என்பார். ஒரு முறை பகவான் அமர்ந்திருக்கும் கூடத்திற்கு வயது முதிர்ந்த துறவி ஒருவர் வருகின்றார். ஏதோ படித்துக் கொண்டிருந்த பகவான் சட்டென்று அவர் பக்கம் திரும்பி அவரைப் பார்க்கின்றார். பகவானின் கண்களில் அப்படி ஓர் அன்பும் ஆனந்தமும் பொங்கிவழிந்தது. "வா, வா, பிரிய சகோதரனே, ஆக கடைசியில் இங்கு வந்து சேர்ந்து விட்டனை அல்லவா?" என்று பரிவோடு அவரது மோனம் கூறுவதுபோல் இருந்தது என்கின்றார் எதெல். துறவியும் அவரைப் பார்த்தவண்ணம் அவரை அணுகுகின்றார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் இருந்தனர். அவர்கள் இருவரும் பேசிக்கொள்ளவே இல்லை. ஆனால் அவர்கள் இடையே நிலவிய சொல்கடந்த நெருக்கத்தை அன்பின் நெகிழ்வை மெர்ஸ்டன் உணர்கின்றார். பின்னர் அத்துறவி பகவானுக்கு அருகில் அமர்ந்து நீண்ட நேரம் ஆழ்ந்து விடுகின்றார். பகவானும் ஏதொன்றும் நடக்காதது போல் தனது படிப்பைத் தொடர்கின்றனர். ஞானியின் மோனத்தின் வல்லமையையும் அவரது கண்ணோக்கின் அருளின் சிறப்பையும் வெளிக்கொணருவனவாக இருக்கின்றன இந் நிகழ்ச்சிகள். இவை ஒன்றா பலவா, எண்ணிலாதவை ஆகும்

**கம்மயமாம் தீர்த்தங்கள் கல் மண் ஆம் தெய்வங்கள்**
**அம்மகத்துக் கட்குஇணையே ஆகாவாம் - அம்ம! அவை**
**எண்இல் நாளால்தூய்மை ஏய்விப்ப; சாதுக்கள்**
**கண்ணினால் கண்டிடவே காண்.**

**(உள்ளது நாற்பது - அனுபந்தம்)**

*நன்னீராடலும், கல் மண்ணால் ஆகிய தெய்வங்களை வழிபடுவதும் ஆகியவை ஞானிகளை நேரில் கண்டு பூசிப்பதற்கு இணையே ஆகா.*

*அம்மா! அவை எண்ணிக்கைக்கு அப்பாற்பட்ட நாட்கள் கழிந்த பின்னரே ஒருவரைத் தூய்மைப் படுத்தும்.*

*ஆனால் ஞானிகளின் கண் பார்வை பட்ட உடனேயே ஒருவர் மனம் தூயதாகிவிடும்.*

*இந்தப் பாடல் பகவானால் தமிழில் ஆக்கப் பட்டதற்கான ஒரு நிகழ்ச்சி முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரே ஒரு பெண் குழந்தையைத் தவிர பிற குழந்தைகள் அனைத்தையும் இழந்து கணவனையும் இழந்து இளமையிலேயே ஆற்றொணா துக்கம் அனுபவித்து வாடியவர் எச்சம்மாள். பாரதத்தின் பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று வழிபட்டும், சமய ஆசான்களுக்குத் தொண்டு செய்து ஆசி பெற்றும் நிம்மதி இழந்து தவிக்கும் மனதோடு மீண்டும் தனது சொந்த ஊருக்கே வந்து சேர்ந்தார் எச்சம்மாள். அப்பொழுது தான் அவருக்கு பகவான் ரமணரைத் தரிசிக்கும் தருணம் வாய்த்தது. அண்ணாமலை வந்தவர் ரமணரின் சன்னிதியில் முதன் முறையாக வாட்டிவந்த வதைகள் அனைத்தினின்றும் விடுதலை பெற்று இதுவரை அனுபவியாத அமைதி நிலை உற்றார். அதன் பின்னர் பகவானே கதி எனக் கொண்டார். ஒவ்வொரு நாளும் பகவானுக்கு உணவு படைத்து அதன் பின்னரே உணவு உண்பது என்னும் விரதத்தை அன்றிலிருந்து அவரது வாழ்வு முடியும் நாள் வரை காத்து பகவானிடமே இறுதியில் ஒன்றிவிட்டவர்.*

*தனது சகோதரரின் மகளை பகவானின் அருளோடு தனது வளர்ப்பு மகளாக எடுத்துக் கொண்டார். அவள் தான் செல்லம்மாள். பச்சிளம் வயதிலிருந்தே பகவானோடு பழகி வந்தவர். எச்சம்மாள் சில சமயம் செல்லம்மாவை பகவானுக்கு உணவு கொடுத்து வர*

அனுப்புவது உண்டு. எச்சம்மாள் கார்த்திகை, ஏகாதசி என்று பல நாட்களில் உபவாசம் இருப்பது வழக்கம். அச் சமயங்களில் எல்லாம் செல்லம்மாளையும் உபவாசம் இருக்கச் சொல்லுவார். ஒரு முறை செல்லம்மாள் பகவானுக்கு உணவு கொண்டுவந்த அன்று அவள் கார்த்திகையின் காரணமாக உணவு உண்ணாமல் வந்திருந்தாள். உணவு கொண்டு வந்திருக்கும் சிறுமி உண்ணாவிரதம் காக்க தான் மட்டும் உண்ண பகவானுக்குத் தோன்றவில்லை. அச் சிறு வயதிலேயே அவள் உண்ணா விரதம் எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கூறி மேலும் பலவாறாக எடுத்துச் சொல்லி அவளையும் உணவு உண்ணும்படி செய்தனர் பகவான். அடுத்த நாள் அவள் வருகின்ற பொழுது வழியில் கிடந்த ஒரு தாளில் சமஸ்கிருதப் பாடல் ஒன்று இருந்ததைக் கண்டு அதை எடுத்து வந்திருக்கின்றாள். அதை பகவானிடம் காட்ட, அதை படித்துப் பார்த்த பகவான் மேலே காணப்படும் பாடலைக் கண்டார். செல்லம்மாளிடம், " இதோ பார். நேற்று உன்னிடம் நான் சொல்லிக்கொண்டு இருந்தேனே, அது தான் இந்தப் பாடலிலும் சொல்லப்பட்டிருக்கின்றது, " என்றனர். செல்லம்மாளுக்கு அதன் பொருளைத் தமிழில் விளக்கிச் சொன்ன பகவான் அவள் பொருட்டு அப் பாடலைத் தமிழில் இயற்றினார். அதுவே இந்தப் பாடல்.

இது குறித்து மேலும் சில செய்திகளை பகவான் தேவராஜ முதலியாரிடம் சொல்கின்றார். சாது சங்கம் அல்லது ஞானிகளோடு கொள்ளும் உறவின் மேன்மை பற்றிய மூன்று சமஸ்கிருதப் பாடல்களை செல்லம்மாவின் பொருட்டு பகவான் தமிழில் இயற்றி இருக்கின்றார். திருமணம் ஆகி ஒரு ஆண் மகவைப் பெற்று, சில காலம் கழிந்து செல்லம்மாவும் உடல் நீத்தார். செல்லம்மா பகவானையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பார் என்று பகவானே சொல்கின்றனர். ஏதாவது எழுதுவது என்றால் ரமணா என்று எழுதித் துவங்கி ரமணா என்று

முடிப்பாராம். எழுதிய கடிதங்களில் எல்லாம் முதலிலும் முடிவிலும் பகவானைக் குறித்தே எழுதி இருப்பாராம். இவ்வளவு இடைவிடாது பகவானை மனதில் எப்பொழுதும் கொண்டிருந்த பக்தியில் சிறந்த செல்லம்மாவினைப் போற்றி அவர்போல் குருவினை மனதில் மிகமிக நெருங்கி இடைவிடாது அவரது அருளை வேண்டும் பக்குவம் அடைவோமாக.

---

## *ரமணோதயம் காப்பு நிதி*
## *தொடரும் நன்கொடையாளர்கள்*

| | | | |
|---|---|---|---|
| | | *அமெரிக்கா, சான்பிரான்சிஸ்கோ, ரமண அன்பர்கள், திருமதி. சுனிதா பரசுராமன் மூலமாக* | 107000 |
| *திரு* | A. | *கார்த்திகேயன், திருவான்மியூர்* | 25000 |
| *ஸ்ரீமதி* | N. | *ருக்மணிதேவி,* R.A. Puram, *சென்னை* | 2100 |
| *திரு* | | *ஞானம் கார்த்திகேயன், கே.கே. நகர், சென்னை* | 2000 |
| *திரு* | R. | *விஸ்வநாதன், தி.நகர், சென்னை* | 1000 |
| *திரு* | | *கோபாலன், சென்னை 51* | 1000 |
| *திரு* | | *உமா மஹேஸ்வரன், உத்தமபாளையம்* | 700 |
| *திரு* | T.R. | *லட்சுமணன், அம்பத்தூர், சென்னை* | 500 |
| *திரு* | | *சங்கரன், அடையாறு* | 500 |

# பசுவின் கழுத்தில் கயிறு

## சேலம் சேதுகுமாரன்

*பர்த்ருஹரியின் பொருள் பொதிந்த ஸ்லோகம் இது:*

*போ⁴கா³ ந பு⁴க்தா வயமேவ பு⁴க்தா:*
*தபோ ந தப்தம் வயமேவ தப்தா:*
*காலோ ந யாதோ வயமேவ யாதா:*
*த்ருஷ்ணா ந ஜீர்ணா வயமேவ ஜீர்ணா:*

வைராக்ய சதகம், 7

காலம் கழிகின்றது என்கிறோமே, காலமா கழிகிறது? இல்லை, நாம்தான் கழிந்து கொண்டு இருக்கிறோம். போகங்களை நாம் அனுபவிப்பதால் அவை தீர்ந்து போகின்றனவா? இல்லை, நாம்தான் தீர்ந்து போய்க் கொண்டு இருக்கிறோம். தவம் நாம் முயற்சி செய்வதால் எரிக்கப்படுகிறதா! இல்லை, நாம்தான் எரிக்கப் படுகிறோம். ஆசைகள் நாம் முயன்று அடைவதால் ஜீரணம் ஆகின்றனவா? இல்லை, நாமேதான் கடைசியில் ஜீரணமாகி விடுகிறோம்.

ஆத்ம நாட்டம் இல்லாதோரைக் கண்டு நகைத்து பர்த்ருஹரி பாடிய பாடல் இது.

ஆசைகள் நம்மை உலகுடன் பிணைக்கின்றனவா? இது நம் மனைவி மக்கள் என்னும் உறவுகள் நம்மை உலகுடன் பிணைக்கின்றனவா? என்ற கேள்விக்கு ஒரு சூஃபிக் கதை விடையளிக்கிறது.

ஒரு குருவும் அவரது சீடர்களும் சென்று கொண்டிருந்தனர். நாம் மனஉறுதியுடன் இருப்பின் பந்தங்கள் நம்மைக் கட்ட விடாமல் நம் கைக்குள் அடக்கிக் கொண்டு நாம் சுதந்திரமாகச் செயல்பட முடியுமல்லவா? ஆசைகளை வைத்துக்கொண்டு ஆத்ம சாதனையும் செய்யலாமே? என்று வினவினர் சீடர்கள்.

*அப்போது ஓர் இடையன் ஒரு பசுவின் கழுத்தில் கயிற்றைக் கட்டி, அதன் மறுமுனையைத் தன் கையில் வைத்துக் கொண்டிருந்தான். பசு மேய்ந்துகொண்டே இருந்தது. குரு சீடர்களை நிற்கச் சொன்னார். இடையனிடம், "நீ பசுவோடு கட்டப்பட்டுள்ளாயா அல்லது பசு உன்னோடு கட்டப்பட்டுள்ளதா?" என்று கேட்டார். இடையன் தயங்காமல், "பசுதான் கயிற்றில் கட்டப்பட்டு என் கையில் உள்ளது. நான் எப்படிப் பசுவோடு கட்டப்பட்டிருந்பேன்?" என்று கேட்டான். உடனே குரு, பசுவின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டார். சட்டென பசு ஓட்டம் பிடித்தது. இடையன் பசுவைத் துரத்திக் கொண்டு அதன் பின் ஓடினான்.*

*உடனே குரு சீடர்களைப் பார்த்து, "இடையன் பசு தன் கையில் கட்டுண்டு கிடப்பதாக நினைத்தாலும், உண்மையில் அவன்தான் பசுவிடம் கட்டுண்டு கிடக்கிறான் பாருங்கள். அதேபோல்தான் உலக வாழ்க்கையில் மிக சாமர்த்தியமாக நாம் ஆசைகளை வென்று விட்டதாக நினைத்தாலும் அவையாவும் உள்ளவரை நாம்தான் அதில் கட்டுண்டு கிடக்கிறோம்" என்றார்.*

*பர்த்ருஹரியின் கூற்றின்படி, காலத்தை நாம் கழிப்பதாகக் கருதினாலும், உண்மையில் நாம்தாம் கழிந்து கொண்டு இருக்கிறோம். பாகவதத்தில் உள்ள காலயவனன் கதை இதை விளக்குகிறது. கண்ணனுடன் போரிட அறைகூவல் விடுத்து, காலயவனன் என்ற அரக்கன் வருகிறான். கண்ணனோ போரிடாமல் களத்தை விட்டே ஓடுகிறான். காலயவனன் அவனைத் துரத்துகிறான். கண்ணன், க்ருதயுகத்திலே தேவர்க்குப் பேருதவி செய்து, அதற்குப் பிரதிவரமாக நீண்ட தூக்கம் என்ற வரத்தைப் பெற்று, முசுகுந்தன் தூங்கிக் கொண்டிருந்த குகையை நோக்கி ஓடி, உள்ளே நுழைகிறான். உள்ளே ஓடிச் சென்ற காலயவனன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த முசுகுந்தனை எழுப்புகிறான்.*



விழித்துக் கொண்ட முசுகுந்தனின் பார்வை பட்டவுடன் காலயவனன் சாம்பலாகிப் போகிறான். இது ஓர் உருவகம். ஒருவன் ஆன்மிக விழிப்புணர்ச்சி பெறும்போது, 'காலம்' இல்லாமல் போய் விடுகிறது. நாம் ஓயாமல் போரிட்டிக் கொண்டிருக்கும்பொழுது காலம் நம்மை விழுங்கிவிடும். ஆன்மிக விழிப்புணர்ச்சி பெறும்போது காலம் எரிக்கப்பட்டு விடுகிறது.

காலத்தின் பின்னால் ஓடிக் கொண்டிருந்தால் காலத்தை அழிக்க முடியாது. ஆசைகளின் பின்னால் ஓடினால் பிணைப்புகளை நீக்க முடியாது. கண்ணன் காலயவனை, காலத்தைக் கடந்து முன்னே செல்கிறான். அப்போது காலம் எரிக்கப்படுகிறது.

நாம் எல்லோரும் பிரக்ஞையற்ற குகையில் நீண்ட உறக்கத்தில் இருக்கும் முசுகுந்தனைப் போன்றவர்கள். கண்ணனாகிய சத்குரு நம் மனக் குகையில் நுழையும்போது, நம் விழிகள் திறக்கின்றன. சத்குருவின் தோற்றம் நாம் விழிப்புணர்வு பெறக் காரணமாய் அமைகிறது. விழிப்புணர்வு பெற்ற சாதகனின் பார்வை பட்டவுடன் காலம் எரிந்து போகிறது. காலம், இடத்தைக் கடந்த பூர்ண ஆத்மஸ்வரூபமாக சாதகன் திகழ்கிறான். "இனித்தான் எழுந்திராய், ஈதென்ன பேருறக்கம்?" என்று ஆண்டாள் விடுக்கும் அறைகூவலைச் செவிமடுப்போம்.

# மாயாஜாலத்திலிருந்து மீள்வோம்

**கௌதமன்**

முன்னொரு காலத்தில் வாரணாசி அருகே இருந்த ஒரு கிராமத்தில் ஒரு சிறந்த மந்திரவாதி வாழ்ந்து வந்தான். பல ஆண்டுகள் முயன்றபின், அவனுக்கு ஒரு மந்திர சித்தி, அவனுடைய குரு மூலமாகக் கிடைத்தது. அந்த மந்திரத்தை, ஓர் ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே, அதுவும் வானத்தில் கிரகங்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் இருக்கும்போது மட்டுமே உச்சரிக்க முடியும். அப்படி, கிரகங்கள் வரும் நேரம் அவன் தனது கைகளுக்குள்ளே மந்திரத்தை உச்சரித்துப் பின்னர் ஆகாயத்தை நோக்கி கைகளை விரித்தால் அவன் கரங்களுக்குள்ளே கை நிறைய விலை உயர்ந்த மாணிக்கங்கள் விழும். இதுவே அவனுடைய குருவின் வழிகாட்டல். அந்த ஆண்டும் கிரகங்கள் கூடும் சமயத்திற்காக அவன் காத்திருந்தான்.

அந்த மந்திரவாதிக்கு ஒரு சீடன் இருந்தான். அவன் சிறந்த அறிவு படைத்தவன். பேராசை அற்றவன். குருவின் நன்மையையே எப்போதும் வேண்டுபவன்.

ஒருநாள் அந்த மந்திரவாதி தொலைவிலுள்ள ஓர் ஊருக்குச் செல்ல வேண்டி வந்தது. அந்த ஊருக்குச் செல்லும் வழி, அபாயம் நிறைந்த ஒரு காட்டு வழியே செல்ல வேண்டும். அந்தக் காட்டினிலே பிரயாணிகளைக் கடத்தி, அவர்களை பணயக் கைதிகளாக வைத்துப் பணம் பறிக்கும் 500 பேர்கொண்ட திருடர் கூட்டம் ஒன்று இருந்தது. அந்தக் காட்டின் வழியே மந்திரவாதியும் கடந்து சென்று கொண்டிருந்தபோது அவர்கள்

*மந்திரவாதியைப் பிடித்துக் கொண்டார்கள். உன் உயிரின் விலை 5000 பொற்காசுகள். இந்தப் பணத்தை நாளைக் காலைக்குள் கொண்டு வரவில்லையெனில் உன்னைக் கொன்று விடுவோம். எனவே உன் சீடனை அனுப்பி 5000 பொற்காசுகளைக் கொண்டு வரச் சொல் என்றார்கள்.*

*பணம் கொண்டு வரச் சென்ற சீடன் வானத்தைப் பார்த்தான். உடனே ஆசிரியரிடம் கூறினான். ஐயனே! நீங்கள் காத்திருந்த அந்த இரவு இன்று வந்து விட்டது. இன்னும் சற்று நேரத்தில் அந்தக் கிரகச் சேர்க்கை நடைபெறும். ஆண்டுக்கொருமுறைதான் வரும் இந்தச் சேர்க்கையின்போது மந்திரம் உச்சரித்தால் ஏராளமான செல்வம் வந்து அமையும். இதனைக் கொண்டு பணயம் செலுத்தித் திருடர்களிடமிருந்து தப்பித்து விடலாம் என்று நீங்கள் எண்ணலாம். ஆனால் எனது தாழ்மையான வேண்டுகோள்! இந்த மந்திரத்தைக் கொண்டுவரும் மாயவித்தையை இன்று செய்யாதிரும். மிகப் பெரியதொரு செல்வம் கொழிக்கும் இந்த மந்திர ஜாலத்தை இந்தத் தீயவர்கள் முன்னே நிகழ்த்தினால் அவர்களைப் பேராசை பற்றிக் கொள்ளும். அது உங்களுக்கும் திருடர்களுக்கும் இருவருக்குமே மோசத்தை வரவழைக்கும். எனவே, இதை இன்றிரவு செய்யாதீர்கள். நான் எப்படியாவது நாளைக் காலைக்குள் பணம் கொண்டு வந்து விடுவேன் என்று கூறிச் சென்றான்.*

*சீடன் சென்றபின் திருடர்கள் மந்திரவாதியை குகைக்கு வெளியே ஒரு மரத்தில் கட்டிவிட்டு, உணவு, தண்ணீர் எதுவும் கொடுக்காமல் சென்று விட்டனர். மாலை போய் இரவு வந்தது. வானத்தில் கிரகக் கூட்டத்தைக் கண்ட மந்திரவாதி வருடத்திற்கு ஒருமுறைதான் வரும் இந்த நேரத்தை நான் ஏன் வீணாக்க வேண்டும்? மந்திர ஜாலத்தின் மூலம் அவர்கள் கேட்கும் பணத்தைக் கொடுத்து விடலாமே! சீடன் அநாவசியமாகப் பயப்படுகிறான். மிகச் சிறந்த மந்திரவாதியான எனக்கு*

இதனால் என்ன அபாயம் வந்து விடப் போகிறது? அந்தத் திருடர்கட்கு இதனால் அபாயம் வந்தால் நமக்கு என்ன? என்று எண்ணினான். எனவே சீடனின் அறிவுரையைப் புறந்தள்ளிவிட்டு, அவன் திருடர்களைக் கூப்பிட்டுச் சொன்னான்: எதற்கு என்னை அநாவசியமாகக் கட்டி வைத்துள்ளீர்கள்? இந்த அற்பப் பணமாகிய 5000 பொற்காசுகளுக்காகவோ? என்னை அவிழ்த்து விடுங்கள். என்னைக் குளிக்க விட்டு, புதிய ஆடைகளை அணிவியுங்கள். மலர்மாலை சூட்டுங்கள். பின்னர் எனது வித்தையைச் செயல்படுத்த என்னைத் தனியே விடுங்கள் என்றான். அதன்படியே திருடர்கள் செய்தனர். ஆயினும் அவனை முற்றிலும் நம்பாமல் ஒளிந்திருந்து அவன் செயலைக் கண்காணித்தனர்.

யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்று எண்ணிய மந்திரவாதி, குளித்து, பூமாலை அணிந்து பின்னர் ஆகாயத்தைப் பார்த்தான். வானில் கிரகங்கள் சரியான நிலைக்கு வந்ததைக் கண்டபின், கண்மூடி மந்திரங்களை உச்சரித்தான். அவனது குவிந்த கைகளில் மிக விலையுயர்ந்த ரத்தினங்கள் வந்து பொழிந்தன.

உடனே ஒளிந்திருந்த திருடர்கள் வெளியே வந்து, அந்த ரத்தினங்கள் அனைத்தையும் பறித்துக் கொண்டனர். பின்னர் மந்திரவாதியைக் கட்டி இழுத்துச் சென்றனர். செல்லும் பாதையில், திடீரென பயங்கரமான ஆயுதங்களைத் தாங்கிய 500 பேர் கொண்ட கொடிய கொள்ளைக் கூட்டத்தினர் வந்து மறித்தனர். கடத்தல் செய்த கூட்டத்தினரை மிரட்டினர். நீங்கள் மூட்டை கட்டி வைத்துள்ள பொருள் அனைத்தையும் கொடுத்து விடுங்கள் என்று ஆயுதங்களைத் தூக்கினர்.

கடத்தல் கூட்டத்தினர், எங்களை விட்டு விடுங்கள்! இந்த மந்திரவாதியைப் பிடித்துக் கொள்ளுங்கள். இவன் ஆகாயத்தைப் பார்த்து மந்திரம் சொன்னால் ரத்தினங்கள் வந்து குவியும் என்றனர். அதைக் கேட்ட கொள்ளையர்கள்,

அவர்களை விட்டுவிட்டு மந்திரவாதியைப் பிடித்துக் கொண்டனர். மந்திரவாதியை நோக்கி, எங்களுக்கும் ரத்தின மழையைப் பொழியச் செய்வாய் என்றனர். மந்திரவாதி, எனக்கு ரத்தின மழை பொழிய வைக்கும் சக்தி இருப்பது உண்மைதான். ஆனாலும் இந்த வித்தையை ஓராண்டில் ஒரே முறைதான், கிரகங்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் அணிவகுக்கும்போது மட்டுமே செய்ய முடியும். இந்த ஆண்டிற்கான அந்தச் சமயம், சிறிது நேரத்திற்கு முன் கடந்து விட்டது. எனவே நீங்கள் அடுத்த ஆண்டுவரை காத்திருந்தால் உங்களுக்கும் ரத்தினக் குவியலை அளிப்பேன் என்று கூறினான். மந்திரவாதி ஏதோ சாக்குச் சொல்லி தங்களை ஏமாற்றுகிறான் என்று எண்ணிய கொள்ளையர்கள் அவனை வாளால் இரண்டாக வெட்டி எறிந்தனர். பின்னர், கொள்ளையர்கள் கடத்தல் கூட்டத்தினரைத் தேடிச் சென்று கடுமையாகத் தாக்கினர். அந்தத் தாக்குதலில் கடத்தல்காரர்கள் அனைவரும் மாண்டனர். அவர்கள் மந்திரவாதியிடம் இருந்து கைப்பற்றிய ரத்தினக் குவியல் கொள்ளையர் வசம் வந்தது.

உடனே அந்தக் குவியலில் பெரும்பகுதியைக் கைப்பற்றக் கொள்ளையர் தங்களுக்குள் போரிட ஆரம்பித்தனர். பெரும்பாலானோர் இந்தச் சண்டையில் இறந்து போக இருவர் மட்டுமே மிஞ்சினர். அந்த இரண்டு பேரும் ரத்தினக் குவியலைக் காட்டில் ஒளித்து வைத்தனர்.

அவர்களுக்கு மிகுந்த பசியெடுக்க ஆரம்பித்தது. எனவே ஒருவன் ரத்தினக் குவியலைக் காக்கவும், மற்றொருவன் சமைக்கவும் முடிவு செய்தனர். அதன்படியே ஒருவன் சமைக்க ஆரம்பித்தான். மற்றொருவன் ரத்தினக் குவியலைக் காவல் காக்க ஆரம்பித்தான்.

காவல் காத்துக் கொண்டிருந்தவன் அடுத்தவன் சமைத்து முடித்தபின் அவனைக் கொன்று விட்டால்

*இந்தப் பெரும் பொக்கிஷத்தை நானே வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணினான். சமைத்துக் கெண்டிருந்தவனோ, சமைத்தபின் இந்த உணவை இரண்டாகப் பகிர்ந்து கொண்டு, மற்றொருவனுக்கு அளிக்கும் பாகத்தில் விஷத்தைக் கலந்து, அதை அவன் உண்டவுடன் இறந்துவிடுவான் என்று எண்ணினான். அதன்படியே பாதி உணவை அவன் சாப்பிட்டுவிட்டு, விஷம் கலந்ததை மற்றவனிடம் சென்று அளித்தான். மற்றவனோ, உடனே கத்தியை உருவி அவனைக் கொன்றான். பின்னர் பசியின் காரணத்தால் உடனே உணவை உண்ணத் தொடங்கினான். கடும் விஷம் கலந்திருந்தபடியால் உடனே செத்து விழுந்தான்.*

*மறுநாள் மந்திரவாதியின் நல்ல மாணாக்கன், பணயப் பணத்துடன் முதலில் சந்தித்த இடத்தில் வந்து சேர்ந்தான். அங்கே மந்திரவாதியையோ கடத்தல்காரர்களையோ காணவில்லை. தன்னுடைய குருவைத் தேடிச் சென்றவன், சிறிது தூரத்தில் தனது ஆசானின் உடல் இரண்டு துண்டுகளாகக் கிடப்பதைப் பார்த்தான். தனது எச்சரிக்கையை மீறியதால்தான் மந்திரவாதிக்கு கொடும் மரணம் நேர்ந்தது என்று அறிந்தான். மந்திரவாதியின் உடலைத் தகனம் செய்தபின் சிறிது தூரத்தில் 500 கடத்தல்காரர்களின் உடல்களும் கிடப்பதைக் கண்டான். இன்னும் சிறிது தூரத்தில் 498 கொள்ளையர்களின் உடல்கள் கிடப்பதைக் கண்டான். அதிலிருந்து சென்ற இருவரின் காலடிச் சுவடுகளைப் பின்பற்றியவன் சிறிது தூரத்தில் ஒரு கொள்ளைக்காரன் உடல் சோற்றுப் பானையின் மீது கிடப்பதையும் மற்றொருவன் தலை அறுபட்டுக் கிடப்பதையும் அவர்கள் அருகிலே ரத்தினக் குவியல் கிடப்பதையும் கண்டான்.*

*சீடன், எவ்வளவு நூலறிவு பெற்றிருந்தால் என்ன? எவ்வளவு மந்திர சித்தி பெற்றிருந்தால் என்ன? என்னுடைய ஆசானுக்கு அகங்காரமும் தன்னால்*

எல்லாம் சாதிக்க முடியும் என்ற ஆணவமும் போகவில்லை. இந்த ஆணவத்தினால், தன்னையும் அழித்துக்கொண்டு இன்னும் 1000 பேர்களையும் அழியச் செய்தார் என்று எண்ணி வருந்தியவன், தன்னை ஒருவாறு தேற்றிக் கொண்டான். பின்னர் அந்த ரத்தினக் குவியல்களைக் கொண்டுபோய் உலக நன்மைக்காகச் செலவிட்டான்.

பகவான் கூறுவது இதுதான். மனத்தை அடக்காதவரை, அகங்காரத்தை அடக்காதவரை எத்தகைய சித்திகள் பெற்றாலும் பயன் ஏதுமில்லை. அவை வெறும் கனவு போன்றவைகளே. அவைகளைச் சொப்பனம் ஆர் சித்திகளே என்று பகவான் குறிப்பிடுகிறார். இதே சித்திகளால் அடையும் பொருள் அனைத்தும் நாம் கனவில் அடையும் செல்வம் போன்றவைகளே. நாம் கனவிலிருந்து விழித்தவுடன் அவை மறைந்து விடும். எனவே இந்த உலகமாகிய கனவிலிருந்து விழித்தெழுக என பகவான் அறிவுறுத்துகிறார்.

சினமடங்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும்
மனமடங்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே

என்று தாயுமானவர் அறிவுறுத்துவதும் இதனையே. இதனை நாம் உள்வாங்கி உலகக் கனவிலிருந்து விழித்தெழுவோமாக!

---


## ரமணோதயம்

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

வஸந்தா ராகவன் 9445432335

# ஸ்ரீ பகவானின் ''ஆன்ம வித்தையை விளக்கும் 'ஆழ் துயிலின்' அரிய தத்துவங்கள்''

**I.** *ஆழ் துயில்/சுஷுப்தி என்னும் நிலையின் தன்மை பற்றிய ஸ்ரீ பகவானின் விளக்க உரை/தெளிவுரை/ விரிவுரை:*

**II-'*சத்*'*தினை/உள்ள* வஸ்துவை *'ஆழ்துயிலின்'* அனுபவம் கொண்டு அபரோக்ஷமாக உணர, ஸ்ரீபகவான் காட்டும் வழிகள்.**

[*வச.1/102*] குருவின் *தயவில்லை,* அனுக்ரகமில்லை, என்ன செய்வதென்று அடிக்கடி ஏக்கமுண்டாகிறதென்று ஏகநாதராவ் பகவானிடம் தெரிவித்துக் கொண்டதற்கு, பகவான் பின்வருமாறருளினார்.

ப: இது அறியாமையே. அதை நீக்க, ஏக்கம் யாருக்கென்று விசாரிக்கவேண்டும். தூங்கும்போது ஏக்கமோ வருத்தமோ ஒன்று மில்லை. அங்கே நானென்னும் இவ்வகந்தையுமில்லை. அகந்தைத்

---

★ மிக மிக நுணுக்கமாகக் கிரஹித்துக் கொள்ள வேண்டிய விளக்கங்கள்) { } இதனுள் உள்ள குறுங்குறிப்பு ஸ்ரீ பகவானது அல்ல.

நூற்குறிப்பு விவரங்கள்:

வச. 1/2 - ஸ்ரீ பகவத் வசனாம்ருதம் பாகம் 1/2, பதிப்பு 2004/2000;

தே.மு - அனுதினமும் ஸ்ரீ பகவானுடன், பதிப்பு-2003; ரம.பொன் - ஸ்ரீ ரமண மகரிஷியின் பொன்மொழிகள், பதிப்பு-2004.

தோற்றம் கிளம்பினால் உடனே இத்தகைய எண்ணங்களும் உணர்ச்சிகளும் உடன்றொடர்கின்றன. ஆதலால் துயர் யாவும் விலக, அவையனைத்திற்கும் மூலகாரணமாம் அகந்தையின் மூலத்தை ஆய்ந்தறிய வேண்டும். தூக்கத்தில் அநேகமாக நமதியற்கை நிலையிலிருப்பதாகச் சொல்லலாம். அப்பொழுது எப்படி எத்துயரு மின்றி ஆனந்தமாயிருக்கிறோ மென்பதை அறியவேண்டும்.

[வச.1/153] ஸ்ரீபக: தூக்கத்தில் எக் குறைபாடும் தோன்றுவதில்லை. அத்தகைய பூரண அஹம் ஸ்வரூபமே நாமாயிருக்க, விழிப்பு நிலையிலே தோன்றும் அகந்தை ஏன் எப்போதும் குறைப்பட்டுக் கொண்டே யிருக்கிறது? அது ஒரு பொய்த் தோற்றமும் போலியுமாதலாலேயே இல்லாத கற்பனைகளையெல்லாம் செய்துகொண்டு அவற்றினிடையே ஓயாது துன்புறுகின்றது.

[வச. 1/157] கே: தூக்கத்தில் நிகழ்வதைக்கொண்டு அவ்வுபாயத்தை உணர்த்தும் ஒரு பத்ததியை பகவான் உபதேசிப்பதுண்டா?

ஸ்ரீபக: பத்ததியும் சூத்திரமும் எதற்கு? தூக்கத்தில் பேதத்தோற்றம் எதுவுமின்றி ஆனந்தமாயிருக்கும் அனுபவம் எல்லோர்க்கும் பொதுவேயாகும்.

[வச.1/104] தூக்கத்தில் மனம் அப்போதைக்கு லயித்திருக்கிறதேயன்றி நசிக்கவில்லை; அதனாலேயே அது மீண்டும் கிளம்புகிறது. தியான சாதனையிலும் அவ்வாறேயெனலாம். நசித்த மனமோ மீண்டுங் கிளம்பாது. மனத்தை நசிப்பிக்க வேண்டும். இன்றேல் அது மீண்டும் மீண்டுங் கிளம்பி உபத்திரவிக்கும்.

[வச. 1/119] கே: மேனாட்டார் சிலர் அகில சேதன உணர்வின் அனுபவத்தை (Cosmic Consciousness) ஒரொருகால் பெற்றிருப்பதாகச் சொல்கிறார்கள். அவ்வனுபவம் எத்தகையது?

*ஶ்ரீபக: ஏதோவோர் நிலைமையில், எப்படியோ, சரேலெனத் தோன்றும் அவ்வனுபவம், வந்தபடியே மறைந்துபோகும். எப்போதும் நீங்காது யாவரிடமுமுள்ள அகண்ட போதத்தை நன்குணர்ந்தால், அதுவே நிலைத்து நிற்கும். தூக்கத்தில் உடலுணர்வில்லை, விழிப்பில் அது இருக்கிறதென்பதே பேதம். தூக்கத்தில் அகந்தை அடங்கியிருக்கிறது; விழிப்பில் அது கிளம்புகிறது. அவ்வளவுதான். தூக்கத்தில், உணர்வை வரையறுக்கும் உபாதிகளில்லை. {அகண்டமான சொரூபத்தில் வேற்றுமைகள் ஏற்படுவதற்குக் காரணம் எதுவோ அது உபாதி எனப்படும் - ஆத். போத. கனக. பக். 341}. விழிப்பில் அவை தோன்றுகின்றன. இவ்வுபாதிகளே பந்திப்பவை. உடல் நானென்னும் தோற்றமே விபரீத ஞானம். இவ்விபரீத ஞானம் ஒழியவேண்டும். அதுவே ஆத்ம சாக்ஷாத்காரம் அல்லது ஆத்மானுபவம். அது புதிதாய்த் தோன்றுவதோ, அடையப்படுவதோ அல்ல; எப்போதும் இருப்பதே. மறைப்பின் நீக்கமே என்றுமுள்ள அதன் அடைவாகச் சொல்லப்படுகிறது.*

[வச. 1/218] கே: வெளிமுகத்தை விட்டு உண்முகப்பட வேண்டுமல்லவா?

*ஶ்ரீபக: வெளிமுகம் உண்முகமென்று இரண்டு எங்கேயிருக்கிறது? தூங்கும்போது இப்பாகுபாடு தோன்றுகிறதா? எழுந்தபின், உடலோடு நம்மை சம்பந்தப்படுத்திக் கொள்வதாலேயே உள்வெளியென்னும் பாகுபாடு தோன்றுகிறது. ஆகவே, விழிப்பெனப்படும் இந்நிலைமை உண்மையை மறைக்கும் ஒரு விபரீதத் தோற்றமே (★). இவ்விபரீதத் தோற்றத்திற் கிடங்கொடா திருந்தால், எல்லாம் பிரஹ்மமயமேயென்றறிவோம். தோற்ற மெனப்படும் அகிலமும் பிரஹ்மமே. தற்கால பௌதிக சாஸ்திரத்தின் முடிவும், முடிவில் எல்லாம் அதி சூக்ஷ்மமான ஏதோவோர் தத்வத்தின் தோற்ற வேறுபாடுகளே என்பதேயாம் (★).*

[வச. 2/70-71] ஸ்ரீபக: தேகாத்ம புத்தியினாலேயே உள், வெளியென்னும் பேதத் தோற்றம் எழுகிறது. உள்ளே பார் என்பதனால் தன்மூல நாட்டமே உபதேசிக்கப் படுகிறது. அவ்வாறு மூலஸ்வரூபம் உணரப்படுங்கால் உள், வெளியென்று பேதத்தோற்றம் அறவே அகல்கிறது. தேவசாம்ராஜ்யமென்றால் மேலே எங்கேயோ இருக்கிறதென நினைக்கிறோம். உண்மையில் உள், வெளி, மேல், கீழ் என்னும் பாகுபாடேயில்லை. தூங்குங்கால் இவ்வேற்றுமைகள் தோன்று கின்றனவா? அவை உண்மையாயிருந்தால் எப்போதும் விளங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

கே: தூக்கத்தின் போது எப்படியிருந்ததோ, யாருக்குத் தெரியும்?

ஸ்ரீபக: வேறேதாவது அங்கிருந்தால், விழிக்குங்கால் அதன் ஞாபகமிருக்கும். ஆனால் அப்போது தான் இருந்ததைப்பற்றி யாருக்கும் சந்தேகமில்லை. தூங்கிக்கொண்டு இருந்தேன் என்று யாவரும் சொல்கின்றனர். பிறவிஷய ஞானமற்ற அந்நிலையே தன்னிலை. அது ஆனந்தமயம். அது இப்போதும் எப்போதும் இருக்கிறது. அதுவே ஜாக்ரத்சுஷுப்தி (விழி துயில்) என்றும், முக்தியென்றும் சொல்லப்படும்.

[வச. 1/6] ஸ்ரீபக: அதை (சாக்ஷாத்காரத்தை) யடைய வேண்டும், அதற்கு எவ்வளவு காலமாகும் என்றெல்லாம் நினைப்பதே பெருந் தடை. இருப்பது ஆத்மா ஒன்றே; அதைத் தவிர வேறொன்றும் இல்லை. ஆத்மாவாயிரு; ஆசை, சந்தேகம் எல்லாம் ஒழிந்து போகும். ஜாக்ரத், ஸ்வப்னம், சுஷுப்தி அவஸ்தைகளிலெல்லாம் சாக்ஷியாயிருப்பதே ஆத்மா. அவஸ்தைகளெல்லாம் அகங்காரத்திற்கே; அதற்கப்பாலிருப்பது ஆத்மா.

"தூங்கும்போது ஒன்றுந் தெரியவில்லையே" என்றால் தூக்கத்தில் நீ இல்லாது போனாயா? அப்பொழுது

'தூங்குகிறேன்' என்றோ 'ஒன்றுந் தெரியவில்லை' என்றோ தோன்றியதா? இப்பொழுது விழித்துக்கொண்ட பிறகல்லவா தூக்கத்தை அறியாமை என்று சொல்கிறாய்? தூக்கத்திலும் விழிப்பிலும் எப்போதும் யதார்த்தமாய் இருப்பது உணர்வு ஒன்றே. ஜாக்ரத்தில் 'உணர்வு' என்பது எதுவென்று தெரிந்துகொண்டால், எல்லா அவஸ்தைகளிலும் உள்ள உணர்வு ஒன்றே யென்பது நன்கு விளங்கும். 'ஒன்றுந் தெரியவில்லை' யென்று விழித்த பிறகே நாம் சொல்லுகிறோம். தூக்கத்தில் எப்படியிருந்தோ மென்பதை யுணர்ந்தால், உணர்வின் சொரூபம் விளங்கும்.

[வச. 1/196-7] ப்ரீட்மேன்: நாம் தூக்கத்திலும் இருக்கிறோம்; ஆனால் அது அறிவொளி மங்கிய நிலைமை. விழிப்பிலும் தூக்கத்திலும் நான் தொடர்ந்திருக்கிறேன் என்று சொல்ல, அறிவறியாமை யென்னும் இரண்டிற்கும் சாக்ஷியாயிலகும் ஏதோவொன்று இருக்கவேண்டும்.

ஸ்ரீபக: சாக்ஷியாயிருப்பதெது? எதன் சாக்ஷி அது? அறியப்படுவது அறிவானென்னும் பேதத்தை ஒப்புவதாகிறது இந்த சாக்ஷிவாதம். சாக்ஷியென்னும் பாவனை மனக்கற்பனையே. விழித்ததன் பிறகு, "தூக்கத்தில் நான் அறியாமைக்கு சாக்ஷியாயிருந்தே" னென்று (ஸாக்ஷிவாதிகள்) சொல்கிறாரேயன்றி, தூங்கும்போது அறியாமைக்கு சாக்ஷியாகத் தான் இருப்பதாகச் சொல்வார் எவருமில்லை. தூக்கத்தில் சாக்ஷியாயிருப்பதாகச் சொல்லப்படுவது யாரென்று அவர்களை வினவினால் 'நான்' என்றே சொல்வர். அந்த நான் யார்? அகந்தையையே நானென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஸாக்ஷியாயிருப்பது இவ்வகந்தையா? அறியாமையில் மங்கிய மனமே அறியாமைக்கு சாக்ஷியாயிருக்க முடியுமா? உபாதியால் வரையுற்ற மனம், அறிவறியாமை யென்னும்

இரண்டிற்கும் சாக்ஷியாயிருக்க முடியுமா? அறியாமைக்கப்பால் இருப்பதே அறியாமையின் சாக்ஷியாகுமேயன்றி அறியாமையில் மறையும் மனம் அறியாமையின் சாக்ஷியாகாது. ஆகவே இந்த 'சாக்ஷிவாதம்' பொருத்தமற்ற தென்பது தெளிவாம் (★). சுத்தப் பிரக்ஞை வரையற்றது. வரையுற்ற மனம் ஆத்மப் போலியே (ஆத்மாபாஸமே)யாகும்.

[வச. 1/148] கே: ஆழ்ந்த தூக்கத்தில் நானிருப்பதாகத் தெரியவில்லையே!

ஸ்ரீபக: விழித்த பிறகு சொல்லும் வார்த்தை இது. நாமரூபங்களையே இருப்பதாகக் கருதும் மனத்தின் அபிப்பிராயமே இது. உண்மை யாதெனில், தூக்கத்தில் நாம் மனத்தைக் கடந்து உள்ளோம்.

[வச. 2/163] கே: ஆத்மா அகில சாக்ஷியென்பதன் விளக்கத்தையருள வேண்டுகிறேன்.

ஸ்ரீபக: அகிலமென்றும், ஆத்மா அதன் சாக்ஷியென்றும் கூறுங்கால் துவைத பாவத்திற்கு இடமேற்படுகிறது. சூரியன் உலக விவகாரங் களனைத்திற்கும் சாக்ஷியென்பது, எப்படியோ அப்படியேதான் ஆத்மா அகில சாக்ஷியென்பதும். ஆத்ம சந்நிதி மாத்திரத்தால் விவகாரங்கள் யாவும் நிகழ்கின்றன. அவ்வளவே யன்றி ஆத்மா எதனையும் அன்னியமாய் நின்று அறிகிறதென்று பொருளல்ல. சித்தின் ஸந்நிதியில் அசித்திற்கு இடமேயில்லை.

[வச. 2/41] கே: தேகாத்மபுத்தியை ஒழிப்பதெப்படி?

ஸ்ரீபக: விழிப்பிலும் கனவிலும் உடல் மனங்களுடன் சம்பந்தித்திருக்கும் நாம் தூக்கத்தில் அவற்றின் சேர்க்கை யற்றிருக்கிறோம். அதனால் அவை நமதியல்பல்ல, அவற்றின் தொடர்பற்றிருப்பதே நமதியல்பென்னும் உண்மையை விழிப்பு நிலையிலேயே உள்ளாழ்ந்துணர வேண்டும். அத்தகைய பிற தொடர்பற்ற 'நான்' இரு

நிலைமைகள் அல்லது இரு எண்ணங்களின் இடையில் உணர்தற்குரியதாம். ஒன்றைப் பற்றிக்கொண்டு முந்தியதன் பிடியை விடும் புழுப்போன்றது அகந்தை; அதனால் மிக நுண்ணிய அவ்விடைக்காலத்தில் அதன் மூலமாம் ஆன்ம ஸ்வரூபத்தை யுணரலாம். அவ்வியல்பை உணரின் அந்நிலையிலேயே மனத்தை நிறுத்தி நிறுத்தி, பிறவாசனைகள் நீங்கி நமது இயல்பில் நிலை பெறலாம்.

[ர. பொ. 165] கனவிலும் நனவிலும் அதே 'நான்' உடன் தொடர்கிறது. கனவைப் பற்றி நனவில் இப்போது விசாரிக்க வேண்டியது ஒன்றும் இல்லை. விழிப்பு நிலையிலுள்ளபோது, இப்போது உள்ள நான் யார்? 'நான்' தூக்கத்திலிருந்து வெளிப்பட்டவன் எனின், தூங்கும்போது அறியாமை இருளில் 'நான்' அழுந்திக் கிடந்தேன் என்று விழித்தபின் தெரிகிறது. வேத சாஸ்திரங்களும் ஞானியரும் ஐயமறக் கூறும் ஆன்ம சொரூபம் அந்த அழுந்திக் கிடந்த அகந்தையாகிய நானாக இருக்க முடியாது. தூக்கத்தைக் கடந்து இருப்பதும், தூக்கத்தின்போது கனவிலும், பின்னர் நனவிலும், அந்தந்த நிலைகளின் குணங்கள் அறவே இல்லாமல் இருந்து வருவது எதுவோ அதுவே யதார்த்தமான 'நான்'. அவஸ்தாத்திரயத்தின் (துயில், கனவு, நனவு ஆகிய மூன்று நிலைகளின்) சாக்ஷியாய், அதிஷ்டானமாய், குணம் குறி அற்று இருப்பது எதுவோ அதுவே 'நான்' எனும் ஆன்ம சொரூபம் என்று இவ்வாறு அகமுக விசாரணையால் அனுபவித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். பஞ்ச கோசங்களையும் கடந்து நிற்பது ஆன்ம சொரூபம்.

[வச. 2/48] கே: காண்பான், காட்சி, காண்பொருள் என்னும் முப்புடி யுண்டாயின் அது எப்படி ஞானமாகும்?

ஸ்ரீபக: துயிலிலும், மூர்ச்சை லயங்களிலும், மன எழுச்சியற்று உதாசீனமாயிருக்குங்காலும் பேதவுணர் வற்று இருக்கிறோம். அதனால் அது ஞானநிலையாகி

விடுமா? இந்த நிலைகளில் நிகழ்வதென்ன? அவற்றில் இருந்தது இப்போது இல்லாது போய் விட்டதா?(★) இருப்பது என்றுமிருந்து கொண்டேயிருக்கிறது. பேதத் தோற்றம் மனத்தால் வருவது. சிற்சில நிலைமைகளில் மனம் இயங்குகிறது; வேறு சில நிலைமைகளில் அது இயங்குவதில்லை. அடிப்படை உண்மையிலோ யாதோர் பேதமுமில்லை. அது அமைதிமயம், ஆனந்தமயம்.

கே: நான் என்பது எது? நான் எப்படியிருக்கிறேன்?

ஸ்ரீபக: அதைப்பற்றித் தூக்கத்தின் போது கவலைப் பட்டாயா? அப்போதிருந்தவனே இப்போதும் இருக்கிறான். தூக்கத்திலும் விழிப்பிலும் ஒருவனாம் நீயே இருக்கிறாய்.

கே: தூக்கமும் விழிப்பும் வெவ்வேறியல்புகள் வாய்ந்த இருவேறு நிலைமைகள்.

ஸ்ரீபக: அதனால் உனக்கென்ன? ஆத்மாவாம் நீ எல்லா நிலைமைகளிலும் ஒரே விதமாகத்தான் இருக்கிறாய்.

# கூவர்மறை சோலை

## ஜா. ஜயராமன்

255. கறையாம் தொந்தம் அன்பிலிலை
பறைகின்ற நான்நீயு(ம்) இலை
நிறை கோப்பையின் மேல் நிறைதலிலை!
258. அனையது(ம்) இடுவாய்[1] அவன் மனையில்
தினையள(வு) இடுவது விடுப்பாயேல்[2]
பினையொன்றையு(ம்) நீ இடவில்லை
261. வழிதான் நேரே கேட்பின் கூறுவன்
பழியாம் உலகை நோக்கி

1 இடுவாய்=வைப்பாய்

2 விடுப்பாயேல்=தடுப்பாயேல்

இழிவாம் பேரும் பெருமையும் போக்கி
உழைப்பாய் அவன் சேவையில் புக்கி[3]
துறப்பாய் சொல் விவகாரக் கூட்டம்
சிறப்பார் மவுனர் சங்கம் சார்!
267. நண்பன் ஆரிடம்[4] தூர(ம்) அன்று
பண்பாம் நீயே நெறி! உன்றன்
கண்போம் வழியே தெளி!
270 பழமாம் திராக்ஷ ரஸ-உயிர் அறியாய்
இழவாம் அதன்வெற் றுருவில் மோஹம்[5]
எப்போபோம்? நான் போதை உற்றேன்
இப்பொ(து) என்றுன் பொய் ஏனோ சொல்?
274. இடமங்கில்லை முன்னே செலநீ
முடவன்! தாவுவதெப்படியோ?
276. பரவெளி தொலைவாம் சூனியத்திருந்து
திரமுடன் அறிதற்காரு(ம்) இல்லை!
துச்ச அகந்தைப் பற்றுட(ல்) நீ, இச்
ஜகத்தி(ல்) இரவு பகலாய் பல
ஆயிர(ம்) ஆண்டு பிரிந்து(ம்) அலைந்துந்
திரிந்து பின் விழி திறந்(து), உன்
குற்றங்கண்டுன் உள்ளே செக்கு
சுற்றும் மாடென்றுணர்வாய்!
284. ஆயின் அகந்தை பிடிவிட்டு
நீயுன் கடமை தொடங்கின் அவன்
சொர்க்கக் கதவந் திறக்க அவனுக்(கு)
அற்ப இரண்டு நிமிடம் !
288. துக்கி ஜீவன் ஊனிடை குலவின்
சொ(ர்)க்கப்பன் அல்லா[6] அருளார்
இக்கரையுட(ன்) அக்கரை கூடா!
291. மாதம் வருடம் சேதம் செய்துனை

3 புக்கி=புகுந்து

4 ஆர் இடம்=இருந்து ஒளிரும் இடம்

5 ஸனாயின் ரஸிகர் ரூமியும் ஃஈஹி மா ஃஈஹி நூலில், “ஐயஹோ! ரஸத்தை விட்டு அதன் கோப்பையில் ஏனோ மோகம்!” என்று புலம்புகிறார்.

6 சொக்கப்பன்=கலப்பற்ற அழகுள்ள இறைவன்

*சாதல் போல கிடத்தி! வேதம்*
*ஓதும் பூர்ண(ம்) அடைவாய்!*
*294. அசைவற்றிரு தொந்தங்க(ள்) ஊடே*
*மசூதி, கர்த்த(ர்) ஆலயம் ஒன்றே!*
*296. தசையொன் றில்லா சூனியச் சாயைக்(கு)*
*இசைந்தே தோன்றும் நரகம் சொர்க்கம்!*
*அன்பின் துணை கொள் சாதகனுக்கு*
*நம்பிக்கை, சந்தேக(ம்) இரண்டும்*
*வம்புச்செய் வாசல்-திரை தாமே!*
*நம்பன்[7] ரசத்தை மறைப்பதும் நாமே!*
*302. கேடயமாக மாட்டாய்,*
*வாளைக் களையும் வரையில் உன்*
*மகுடம் களையா வரை, அனைவர் பெரு(ம்)-*
*-ஆளாக[8] மாட்டாய்!*
*306. போச்சு வாழ்க்கை ஜீவன் பிரிக்க*
*ஆச்சு முத்தி ஜீவன் ஜெரிக்க!*
*308. சொல்லாம் உணர்வும், சோரன் நானும்[9]*
*இல்லாதாயின் உலகம் அதுவாம்!*
*310. கண் ஆயின் சுத்தி[10] பின்*
*கண் ஆயின்[11], சுத்த பர*
*விண்ணாயின்ப ஸித்தி[12]!*
*313. கூசும் உன் தோல் சுயமே உரிப்பாய்*
*தூசின் அளவாய்க் காணும் வரையில்.*
*கோசங்கள் அவ்வாசல் அணுகா!*
*மோசம் போ(ம்)உன் அகந்தை! மூச்சுப்*
*பேச்சற்று மோனத்தைச் சேர்!*

---

*7 நம்பன்=நம் பிரான்=கடவுள்*

*8 அனைவர்பெருமாள்=மக்கள் விரும்பித் தொடரும் தலைவன்*

*9 சொல்லாம் உணர்வும் சோரன் நானும்=வெற்றுப்பேச்சே சொரூபமான கள்ள அகந்தையும்*

*10 கண் ஆயின்=பார்வை சுத்தம் ஆனபின்*

*11 கண் ஆயின்=ஜீவன் தன் பார்வையின் மூலத்தைத் தேடின்*

*12 விண்ணாய் இன்ப ஸித்தி=சுத்த இருப்பாம் விண் ஆகி இன்படைவோம்.*

# நூல் அறிமுகம்

## கடைசி வார்த்தைகள்

### ஸ்ரீ சத்குரு அண்ணாமலை ஸ்வாமிகள் ஸ்பிரிட்சுவல் டிரஸ்ட் *(திருவண்ணாமலை ...)*

*பகவானின் கலப்பற்ற ஞானத் தேனை உண்டு மகிழ்ந்த, கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பிகளில் தலையாய ஒருவர் ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமிகள். பகவான் வாக்கினையே தேவ வாக்காக, வேத வாக்காகக் கொண்டு நீ இனி ஆஸ்ரமம் வந்து என்னைப் பார்க்க வேண்டாம், பலாக் கொத்திலேயே இருந்து ஆத்ம சாதனம் பயில் என்ற பகவான் கட்டளையை வழுவாது பின்பற்றி, என் ஐயன் எது கூறினாலும் அது எனது ஆன்மீக முன்னேற்றத்திற்காகவே இருக்கும் என்ற திட நம்பிக்கையுடன் வாழ்ந்தவர். தமது ஆன்மிக வாழ்கையில் எழும் ஐயங்களைத் தீர்க்க வேண்டி ஜீவ்யவந்தராகி உள்ள ஒரு சத்குருவை நாடி வந்த சாதகர்கட்கு அவர் கொடுத்த விளக்கங்கள், திரு டேவிட் காட்மென் அவர்களால்* 'Final Talks of Annamalai Swami' *என்ற தலைப்பில் 1999 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. தமிழ்கூறும் நல்லுலகில் பயன் பெற வேண்டி, இந்நூல் திரு வே.குமாரஸ்வாமியால் மொழி பெயர்க்கப்பட்டு அண்ணமலை ஸ்வாமிகளின் அத்யந்த சீடராகிய சுந்தரம் ஸ்வாமிகளால் செப்பனிடப் பெற்றது.*

*ஆங்கில மொழியில் ஒருவருடைய கருத்தின் சிறப்பை மிகச் சிறந்ததாக வெளிப்படுத்துவதற்கு* 'He is the last word' *என்று கூறுவது வழக்கம். அண்ணாமலை ஸ்வாமி கடைசி வார்த்தைகள் என்ற இந்நூலும், ஆன்மீக*

*சாதகர்க்கு வழி காட்டுதலில் 'Last word' என்ற சிறப்புப் பெறுகிறது. சாதகர்க்கு எழுகின்ற ஐயங்களை மனத்தை விட்டு எப்படி அழிப்பது, ஆத்ம விசாரணை செய்வது எப்படி, குருவின் தேவை, உடம்பிற்கு அக்கறை காட்டுதல் தேவை, ஞானியின் அடையாளம் அன்றாட வாழ்க்கையில் பற்றின்மையுடன் எப்படி நாம் வாழ்வது, அதே சமயம் சாதனையையும் தொடர்வது போன்ற சாதகர் மனதை வாட்டும் பல்வேறு விதமான கேள்விகட்கு அண்ணாமலை ஸ்வாமிகள் தெள்ளத் தெளிவாக விடையறுக்கிறார்.*

***யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்***
***அதனின் அதனின் இலன்***

*என்ற வள்ளுவர் வாக்கிற்கு விளக்கமாக ஸ்வாமிகளின் பதில்கள் ஒளிர்கின்றன.*

*ஸ்வாமிகளின் ஒவ்வொரு பதிலும், பகவான் ரமணர் மீது அவர் கொண்டுள்ள பெரும் பக்தியும், அவரது வழிகாட்டலில் அவர் கொண்டுள்ள தீவிர நம்பிக்கையும் வெளிபடுகிறது. ஆத்ம சாதனையில் மிகவும் பக்குவமடைந்த சாதகர்கள் மெய்யுணர்வு பெற்ற ஒரு குருவிடமிருந்து உண்மையைக் கேட்ட மாத்திரத்திலேயே ஆத்மாவை உணர முடியும். அத்தகைய ஞானியின் சொற்களுக்குப் பேராற்றல் உண்டு என்று அவர் அறுதியிட்டுக் கூறுகிறார் (பக்கம் 34). அது அவரது சுய அநுபவத்தில் தெளிந்த உண்மை. நீங்கள் ஆத்மாவோடு ஒன்றிவிடும் போது ஒரு பேராற்றல் உங்களை ஆட்கொண்டு, உங்கள் வாழ்க்கையை அதுவே நடத்திச் செல்கிறது என்று நமக்கு நம்பிக்கை தரும் சொற்களைப் பகர்கிறார் ஸ்வாமிகள். அப்படி ஆன்மாவிடம் பூரண சரணாகதி செய்ய இயலாதவனுக்கு உங்களது பாகுபடுத்தி பகுத்தறியும் திறனை புத்திக் கூர்மையோடு பயன்படுத்திக் கொள்ளுங்கள் பூந்தோட்ட மலர்களின் நறுமணத்தை நுகர்வதோ, அல்லது சாக்கடையின் துர்நாற்றத்தை*

நுகர்ந்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதோ, நீங்களே செய்யும் தேர்வு என்கிறார். கடோபநிஷத்தில் முதல் பகுதியிலே நசிகேதஸ்க்கு யமன் கூறும் வழிகாட்டுதலின் பிரதிபலிப்பு இது. ஸ்வாமிகள் நீங்கள் உணர்வாகவே இருங்கள். ஆன்மா அல்லாத உணர்வு எதனோடும் உங்களை இணைத்துக் கொள்ளாதீர்கள் என்று வழிகாட்டுகிறார் (பக்கம் 129). இதற்கு நேர்வழி குழுவை நீங்கள் நம்ப வேண்டும். ஏனெனில், உங்கட்கு உண்மையைக் காட்ட வேண்டும் என்பதே அவரது ஆர்வம். எப்போதாவது அவர் உண்மையல்லாத சில சொற்களைக் கூடக் கூறலாம். ஆனால், அந்தச் சொற்கள் உங்களைச் சரியான திசையில் செல்ல வைக்கும் என்று அவருக்குத் தெரிந்ததால் தான் அவர் அவற்றைக் கூறுகிறார் என விளக்கமாக பதிலளிக்கிறார் ஸ்வாமிகள் (பக்கம் 119).

இந்த நூலின் மற்றொரு சிறப்பு இதனுடைய ஆற்றொழுக்கான நடை. இடைஇடையே ஸ்வாமிகள் கூறும் கதைகளும், சம்பவங்களும், நூலின் சுவையையும், பயனையும் மேலும் அதிகரிக்கின்றன. ஆன்ம சாதகர்க்கு இந்நூல் ஒரு பொக்கிஷம்.

*சென்ற இதழில் அறிமுகமான நூல்*

***நிகரில்லா நிவேதிதா***

*நூல் வெளியிடுவோர்:*

*ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவிகா சமிதி, லஷ்மி கிருபா, இ.ஜி.1/1 ஸ்டிரிங்கர்ஸ் அபார்ட்மெண்ட்ஸ், ஸ்ட்ரிங்கர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-3. தொலைபேசி: 9444915973. விலை: ₹45*

# செய்திகள்

## *திருவண்ணாமலை செய்திகள்*

### *ரமண கிரந்தாலயம் திறப்பு விழா*

*மோர்வி கெஸ்ட் ஹவுஸில் இயங்கி வந்த ரமண நூற்றாண்டு நூலகம் ஆச்ரம வளாகத்திற்குள்ளேயே ரமண கிரந்தாலய புதிய கட்டிடத்தில் மாற்றப்பட்டு, ஆகஸ்டு 15-ஆம் தேதியன்று அன்பர்கள் உபயோகத்திற்கு துவக்கப்பட்டது. அன்று நடைபெற்ற சிறப்பு பூஜையில் ரமணாச்ரம தலைவர்,* **திரு. வே.சு. ரமணன்** *மற்றும் ரமண அன்பர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.*

### *116-ஆவது அருணை விஜய விழா*

*1896-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மதுரையை விட்டு நீங்கிய பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் செப்டம்பர் 1ஆம் தேதியன்று அருணையை அடைந்தார். அதன்பின் தன் தேகநாளின் இறுதிவரை திருவண்ணாமலையை விட்டு நீங்கினாரில்லை. ஒவ்வொரு ஆண்டும் இந்நிகழ்வினை முன்னிட்டு ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அருணை விஜய விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் மதுரையிலிருந்து சுமார் 70 பக்தர்கள் மதுரையிலிருந்து பஸ் மூலம் புறப்பட்டு பகவான் வந்த வழியாக வந்து, மாம்பழம்பட்டிலிருந்து அறையணிநல்லூர் வரை நடைபயணமாக வந்து பின்னர் பஸ்ஸில் ஸ்ரீ ரமணாச்ரமம் வந்தடைந்தனர். ஸ்ரீ ரமணாச்ரமத்தில் செப்டம்பர் 1-ஆம் தேதியன்று மதுரை அன்பர்கள் சிறப்பு அபிஷேகம், பூஜை மற்றும் பாராயணம் செய்தனர்.*

### *முருகனார் ஆராதனை*

*ஸ்ரீ பகவானின் அத்யந்த பக்தரும், தமிழ்ப் புலவரும், பகவான்மேல் பல்லாயிரம் பாடல்களை இயற்றியவருமான முகவைக் கண்ண முருகனாரின் ஆராதனை விழா*

*வழக்கம்போல் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 15-9-2012 அன்று கொண்டாடப்பெற்றது. இதன் ஒரு பகுதியாக திருவாசக முற்றோதலும், அதைத் தொடர்ந்து ரமண சந்நிதிமுறை முற்றோதலும் ரமண அன்பர்களால் பாராயணம் செய்யப்பட்டது. சிறப்பு நிகழ்ச்சியாக* **மயிலை கபாலீஸ்வரர் கோயில் திரு. சத்குருநாத ஓதுவார்** *அவர்களின் ரமண சந்நிதி முறை மற்றும் திருவாசக, தேவாரப் பாடல்கள் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவின் நிறைவாக முருகனாரின் சமாதியில் சிறப்பு அபிஷேக, ஆராதனை நடைபெற்றது.*

## *முருகனார் மந்திரம், இராமநாதபுரம்*

*முருகனார் மந்திரத்திலும் 15-9-2012 அன்று முருகனாரின் 39-ஆவது ஆராதனை விழா சிறப்பாக நடைபெற்றது.* **சுவாமி ஸ்ரீமத் சிவஸ்ரீ பரானந்த மஹராஜ்**, *தாயுமானசுவாமி தபோவனம், இராமநாதபுரம் முன்னிலை வகித்தார். மாலையில் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் செய்யப்பட்டது,* **திரு. ஆ. சிதம்பர குற்றாலம்** *அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.*

## *மோர்வி கெஸ்ட் ஹவுஸ்*

*ஸ்ரீ ரமணாச்ரம அன்பர் தங்கும் விடுதியான மோர்வி கெஸ்ட் ஹவுஸ் கட்டிட வேலை கடந்த ஒரு வருடமாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு செப்டம்பர் 7-ஆம் தேதி, இவ்விடுதியில் உள்ள புதிதாக வடிவமைக்கப்பட்ட அறை ஒன்று சிறப்புப் பூஜையுடன் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஆச்ரம தலைவர்,* **திரு. வே.சு. ரமணன்**, *அவரது புதல்வர்* **திரு. வெங்கட் எஸ். ரமணன் (ஆனந்த்)** *மற்றும் ரமண அன்பர்கள் கலந்து கொண்டனர். இவ்வாண்டு இறுதியில் முழு வேலை முடிந்து சுமார் 50 அறைகள் அன்பர்கள் தங்குவதற்கு உபயோகப்படுத்தப் படும்.*

## *பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் ஞானோதய விழா*

## *வலையப்பட்டி-உசிலம்பட்டி*

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் ஞானோதய விழா சிறப்பு நிகழ்ச்சிகளுடன் காலை முதல் மாலைவரை நடைபெற்றது. இப்பகுதி பேராசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் பலர்*

*கலந்துகொண்டு உரையாற்றினர். மதுரை ரமண கேந்திரம்* **திரு.சோமசுந்தரம்** *அவர்கள் விழாவைத் தொகுத்தளித்தார். இம்மையத்தின் அமைப்பாளர்* **திரு. பரமன்** *அவர்கள் தொடர்பு: 9150865002*

## *மாடர்ன் உயர்நிலைப்பள்ளி, நங்கநல்லூர்*

*செப்டம்பர் 1-ஆம் தேதியன்று இப்பள்ளி நிர்வாகம் மற்றும் மாணவர்கள் பகவான் ரமணரின் அருணை விஜய விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர்.* **சுவாமி ரமண சொரூபானந்தா** *சிறப்புரையாற்றினார். சுமார் 150 பள்ளி மாணவ மாணவிகள் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் செய்தது குறிப்பிடத்தக்கது.*

## *ரமண உலா*

## *ரமணாலயம், குரோம்பேட்டை*

*செப்டம்பர் 9, 2012 அன்று ரமணாலயம் குரோம்பேட்டையிலிருந்து 40 ரமண அன்பர்கள் சிறப்புப் பேருந்தில் பகவானடியார் வழித்தடங்களைக் கண்டு தரிசிக்கும்வண்ணம் வந்தவாசி அருகேயுள்ள மடம், கிராமம், தேசூர் மடம், திருக்கோவிலூர், திருவரங்கம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய தலங்களுக்கு சென்று வந்தனர். தேசூர் அகிலாண்டம்மாள் ரமண மடாலயத்தில் வந்தவாசி* **டாக்டர் ரவி** *அவர்கள் அனைவருக்கும் தாராளமாக சிற்றுண்டி வழங்கி உபசரிக்கவே, தேசூரம்மாள் இங்கிருந்து ரமணருக்கும் அடியார்களுக்கும் அமுது படைத்ததை நினைவூட்டியது. மடம் கிராமத்தில் மகான் மஸ்தான் அவர்களின் சமாதித் திருக்கோயிலில் அன்பர்களை உபசரித்த ஆசிரியர்* **சுந்தரமூர்த்தி** *அவர்களை மறக்கவியலாது.*

## *சென்னை ரமண கேந்திரம்*

*அக்டோபர் 1, 2 தேதிகளில் சுமார் 60 ரமண அன்பர்களுடன் சிறப்புப் பேருந்தில் திருவண்ணாமலை ரமணாச்ரமம் அடைந்து சிறப்பு அபிஷேக ஆராதனை நடத்தினர்.*

## *அமெரிக்காவில் ஆசிரியரின் சத்சங்கம்*

*நமது ஆசிரியர்* **திரு. ராம் மோஹன்** *அவர்கள் அமெரிக்க அலைகள் அமைப்பு* (WAVES organisation Scholars in US) *அழைப்பின்பேரில் மசாசுசெட் இல் உள்ள டார்ட்மவுத் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொள்ள சர்வதேச உறவுக்கான இந்திய கவுன்சிலால் பரிந்துரைக்கப்பட்டு சென்று வந்தார்.*

*அங்கு அவர் கருத்தரங்கின் அமர்வு தலைவராகவும், பகவானது உள்ளது நாற்பது, ரமண கீதை மற்றும் வசனாம்ருதம் ஆகிய ரமண நூல்களிலிருந்து ரமணரின் பாதையைத் தெளிவுபடுத்தி பகவானது உபதேச அருமைகளை அனைவரும் அறிய வைத்தார். இங்கிருந்து அமெரிக்காவில் பல்வேறு பகுதிகளிலும் பகவானது தத்துவங்களையும் சிறப்பையும் வெளிப்படுத்தும் வண்ணம் சொற்பொழிவுகளை ஆற்றினார்.*

*சிருங்கேரி மடத்தின் ஆதரவுடன் இயங்கும் மேரிலாண்ட் வேதக்குழு, நமது ஆசிரியரை வேதாந்தம், பகவான் மற்றும் பக்தி கருத்துக்கள் பற்றிய சொற்பொழிவுகளை நிகழ்த்த அழைத்தது. அறிஞர்கள் மற்றும் பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

*இவரது இப்பயணங்கள் அனைத்திலும் சான்பிரான்சிஸ்கோ-வைச் சார்ந்த* **திருமதி. சுனிதா பரசுராம்** *மற்றும் ரமணாச்ரமத் தலைவர்* **திரு. வே.சு. ரமணன்** *அவர்களின் புதல்வரும், மருத்துவருமான* **டாக்டர். வெங்கட் எஸ். ரமணன்** *ஆகியோரது பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. குழந்தைகள்கூட இவரது சொற்பொழிவை அமைதிகாத்து ஆர்வத்துடன் கேட்டது குறிப்பிடத்தக்கது.*

*அமெரிக்க ரமண அன்பர்கள்* **திருமதி. சுனிதா பரசுராம்** *அவர்களின் வாயிலாக ரமணோதயத்தின் காப்பு நிதிக்காக ரூபாய் ஒரு இலட்சத்து ஏழாயிரம் திரட்டிக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது. கடல்கடந்த அந்த ரமண அன்பர்களுக்கு 'ரமணோதயம்' தலைவணங்குகிறது.*

## திரு. பி.ஆர். சூர்யானந்தன்

**திரு. சூர்யானந்தன்** *1922-ஆம் ஆண்டு டிசம்பர் 18 அன்று பி.எஸ். ராமசாமிக்கும் ஜானகி அம்மாளுக்கும் பிறந்தார். சிறுவயதிலிருந்தே பகவானது பக்தரான இவர், தனது பதினேழாம் வயதில் ஆங்கில அரசாங்கத்தின் விமானப் படையில் சிறப்பாகப் பணியாற்றியவர். இவர் பழம்பெரும் ரமண அன்பரான பேராசிரியர் சுவாமிநாதன் அவர்களின் மூத்த மகள் திருமதி. மகாலட்சுமி அவர்களை 1965-ஆம் ஆண்டு மணந்து கொண்டார். பின்னர் பெல்காம் மற்றும் கொல்கத்தாவில் பணியாற்றிய போது அங்கும் ரமண சத்சங்கங்களை நடத்தி வந்தார்.*



*பணி ஓய்விற்குப்பின் 1986-ஆம் ஆண்டு நிரந்தரமாக அருணாசலத்தையே வாசஸ்தலமாகக் கொண்டு அண்ணாமலை வனவளர்ச்சிக் குழுவின் உதவித் தலைவராகவும், செயலாளராகவும் சேவை செய்து வந்தார். சிறந்த ரமண அன்பரான இவர் எவரும் எளிதில் அணுகக் கூடிய கருணை நிறைந்த பண்பாளரான இவர் தனது 89-ஆம் வயது நிறைவில் ஆகஸ்டு 29-ஆம் தேதியன்று ரமண பதமடைந்தார். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ரமணோதயம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## திருமதி மங்களம்



*ரமணோதயத்தின் இணை ஆசிரியரான திரு. தியாகராஜன் அவர்களின் தாயாரும், தெய்வத்திரு. பத்மனாப ஐயர் அவர்களின் துணைவியாருமான* **திருமதி. மங்களம் அம்மாள்** *அவர்கள் தனது 92-ஆம் வயதில் 18-7-2012 அதிகாலை இறையடி சேர்ந்தார். இவர் தனது 90-ஆவது வயதிலும் ரமணாச்ரமம் வந்து சென்றுள்ளார். இவர்*

*சிறந்த சிவபக்தை. திருச்சி மாத்ருபூதேஸ்வரர் அபிஷேகத்திற்காக தொடர்ந்து 12 வருடங்கள் தினமும் காலை 7 மணிக்குள் காவிரியிலிருந்து குடத்தில் நீர் எடுத்துச் சென்று கொடுத்து வந்தவர். ரமணோதயம் தனது ரமணாஞ்சலியை அவருக்குச் சமர்ப்பிக்கிறது.*

## *திரு. மண்ணுலிங்கம்*

**திரு. மண்ணுலிங்கம்** *அவர்கள் கிழக்குத் தாம்பரம் ரமண சத்சங்க வேதியின் அன்பர் பணியில் தன்னை முழுதுமாக ஒப்படைத்துக்கொண்டு உழைத்து வந்தார். அவர் தனது 76ஆவது வயதில் 29 ஜூலை 2012 ரமண பதம் அடைந்தார். அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ரமணோதயம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

# *சிறப்பு நிகழ்வுகள்*

## *ரமணாலயம், குரோம்பேட்டை*

*செப்டம்பர் 27 வியாழனன்று திரு. நொச்சூர் வேங்கடராமன் அவர்கள் கலந்துகொண்ட சிறப்பு சத்சங்கம் நடைபெற்றது. திரு. நொச்சூர் வேங்கடராமன் அவர்கள் பகவானின் 'நான் யார்?' ஆத்ம விசாரத்தின் எளிமையையும் பகவானது சிறப்பையும் விளக்கி இரண்டு மணி நேரம் சொற்பொழிவாற்றினார். பல்வேறு பகுதிகளிலிருந்தும் ரமண அன்பர்கள் திரண்டு குவிந்தனர். மிகவும் அமைதியாகவும், பக்தியுடனும் நடைபெற்ற இந்த சத்சங்கத்தில் ரமணாலயத்தின் மூலை முடுக்குகளிலும் அன்பர்கள் அமர்ந்த வண்ணம் பிரவசனத்தை கேட்டு மகிழ்ந்தனர்.*

## *திருவண்ணாமலையில் திருவாசக முற்றோதல்*

*ஜூலை 29 ஞாயிற்றுக்கிழமையன்று திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமம் அருகில், திருக்கழுக்குன்றம் திரு. தாமோதரனார் அவர்களின் பெருமுயற்சியில் பத்தாயிரம் அடியார்கள் கலந்து கொள்ள, மணிவாசகரின் திருவாசகம் முற்றோதலாக சிறப்புற நடைபெற்றது. இம்முற்றோதல் கர்நாடக சங்கீத இசை வடிவில் தொடர்ந்து எட்டு மணி நேரம் இசைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இத்தகைய முற்றோதல் நிகழ்ச்சிகள் பல சிவஸ்தலங்களில் திரு. தாமோதரனார் அவர்கள் தலைமையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் அலுவலர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 23612731 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***கூடுவாஞ்சேரி*** திரு R. மாதவன் | .......... | 9940453553 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***பெசன்ட் நகர், அடையார்*** திரு P. பாலசுப்பிரமணியன் | .......... | 24915881 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | .......... | 9444261296 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***புதுச்சேரி*** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***பொள்ளாச்சி*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.




மகான் மஸ்தான் சமாதி ஆலயம், மடம் கிராமம்




ரமண மடாலயம், தேசூர்

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

